847

15-8-'54

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

3 - SEP 1954
MADRAS

கேட்டீர்களா!

துளசிதாஸரின் ராமசரிதம்

ஹிந்தியில் உள்ள துளசிதாஸரின் ராமசரிதம் ருஷ்ய பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதைப் படிப்பதில் ருஷ்ய மக்கள் மிகுந்த சிரத்தை காட்டி வருகிறார்களாம். அவர் எழுதியுள்ள மற்ற புத்தகங்களையும் மொழிபெயர்க்க ருஷ்ய பாஷை நிபுணர்கள் யோசித்து வருகிறார்களாம். இந்தச் செய்தியை இந்தியாவிலுள்ள ருஷ்ய ஸ்தானிகராலயக் காரியதரிசி அறிவித்துள்ளார்.

சூயஸ் கால்வாய்

ஆசியாவின் தீபகற்பம்போல் இருந்தது ஆப்பிரிக்கா கண்டம். செங்கடலுக்கும் மத்தியதரைக் கடலுக்கும் இடையே இருந்த நிலப் பரப்பில் ஒரு கால்வாயை வெட்டி அந்த இரு கடலையும் பிரிட்டிஷார் சுமார் எழுபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் இணைத்தார்கள். அந்தக் கால்வாயே சூயஸ் கால்வாய் எனப்படும். அதை வெட்டி முடிக்க அறுபது கோடி ரூபாய் செலவாயிற்று. இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்குப் போகவேண்டுமானால் ஆப்பிரிக்காவைச் சுற்றி ஆறாயிரம் மைல்கள் அதிகமாகப் போகவேண்டியிருந்தது. நூற்று மூன்று மைல் நீளமும் இருநூறு அடி அகலமும் உள்ள இந்தக் கால்வாய் பிரிட்டிஷ்காரரின் வசம் இவ்வளவு நாள் இருந்தது. சமீபத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி இருபது மாதங்களுக்குள் அதை எகிப்தியரிடமே பிரிட்டிஷார் ஒப்படைத்துவிட்டுப் போகப் போகிறார்கள்.

சுதந்தர தின விழா

ஆகஸ்டு 15-ஆம் தேதி இந்த நாடு விடுதலை பெற்ற நாளாகும். இந்தத் தினத்தின் காலையில் நாடெங்கும் கொடியேற்று விழாவும் மாலையில் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்துவது வழக்கம். அதேபோல இந்த வருஷமும் கொண்டாடும்படி ஆஜ்மீர் காங்கிரஸில் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

தபால் தலைகள்

இந்தியாவில் முதல் முதலாகத் தபால் பில்லைகளை 1854-ஆம் வருஷத்தில் அச்சிட்டு வெளியிட்டார்கள். அக்டோபர் முதல் தேதியோடு அதற்குச் சரியாக நூறு வருஷமாகிறது. அதையொட்டி இந்திய சர்க்கார் தபால் இலாகாவினர் அன்றைத் தினம் சில விசேஷ தபால் ஸ்டாம்புகள், கவர்கள், கார்டுகள் வெளியிடப்போகிறார்கள்.

தேசிய கால் பந்துப் போட்டி

சென்னை கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தில் சென்ற மாதக் கடைசியிலிருந்து பல ராஜ்யங்களிலிருந்தும் வந்துள்ள கால் பந்து கோஷ்டியினர் விளையாடி வருகிறார்கள். சென்னைக் கோஷ்டி, பம்பாய்க் கோஷ்டியிடம் தோற்றுவிட்டது. இந்தியாவிலேயே சிறந்த கால்பந்து ஆட்டக்காரர்கள் என்று புகழ்பெற்றவர்களாகக் கோஷ்டியை முப்படை வீரர் கோஷ்டி முறியடித்துவிட்டது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 SEP 1954
MADRAS
சென்னை-600 008

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 5 இதழ்: 16

15-8-'54

குழந்தைகளே!	பக்கம்	2
லீடர் மணி	..	3
அருமையான சம்பவம்	..	7
கேளுங்கள், சொல்கிறேன்!	..	9
தூங்கும் அழகி	..	11
புரியாத புதிர்	..	13
தங்கச் சங்கிலி	..	18
எல்லைக் கோடு	..	22
செல்லாத நாலணு	..	26
வெள்ளைக் குயில்	..	29
சந்திரகிரிக் கோட்டை	..	33
எங்கள் பகுதி	..	38
கேட்டீர்களா! - இரண்டாவது அட்டை		
கண்ணன் கிளைக் கழகம் - மூன்ருவது அட்டை		

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரு. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா ரு. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

சர்க்கஸ்



ஈ நமக்கு சர்க்கஸ் வேடிக்கை செய்து காட்டிற்று. ஆனல் அதன் உயிருக்கே சர்க்கஸ் காட்டுகிறது சிலந்தி!

குழந்தைகளே!

இந்த இதழில் போட்டியின் முடிவு அறிவிக்கப்பட்டிருக்கிறது. முதற்பரிசு பெற்ற கதை அடுத்த இதழில் வெளியிடப்படும். பரிசுபெற்ற மாணவனின் புகைப்படத்தைக் கேட்டிருக்கிறோம். அதையும் கதையுடன் வெளியிட எண்ணுகிறோம்.

பரிசு பெற்ற N. A. பாலகிருஷ்ணன் (க.க.B.160) ராசிபுரத்தைச் சேர்ந்த மாணவன். இவனுக்கு நம்முடைய பரிபூரண வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவனுக்குத் தீர்க்காயுளும், பேரும், புகழும் ஏற்படவேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

பரிசு பெற்ற கதையைத் தவிர இன்னும் சிலர் சிறப்பாக எழுதியிருக்கிறார்கள். அவற்றில் ஒன்றைக் கண்ணனில் வெளியிட எண்ணியிருக்கிறேன்.

இந்தப் போட்டிக்கு இதுவரையில் இல்லாதபடி ஆயிரக்கணக்கான கதைகள் வந்து குவிந்துவிட்டன. எல்லாம் சொந்தமாக எழுதிய கதைகள்தாம் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. கதைகள் எல்லாம் பிரமாதம் என்று இல்லாத போதிலும் சொந்தமாக எழுதினால் போதும் என்று உற்சாகத்துடன் போட்டிக்குக் கதைகள் அனுப்பியிருக்கிறார்களே! அப்படி அனுப்பிய எல்லாக் குழந்தைகளுக்கும் என் பாராட்டு உரியதாகும். அவர்கள் அனைவரும் சொந்த முயற்சியில் நம்பிக்கையுள்ளவர்கள் என்பதை எண்ணும்போது எனக்குப் பெருமையாகக்கூட இருக்கிறது. குழந்தைகளுக்கு வேண்டியதெல்லாம் தன்னம்பிக்கையும் உற்சாகமும்தானே! அந்த இரண்டையும் ஏற்படுத்த, கண்ணன் பரிசுப் போட்டி ஒரு காரணமாக அமைந்ததுபற்றி மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் நம்பிக்கையும் உற்சாகமும் பெருகி வளரட்டும் என்று மனமார வாழ்த்துகிறேன். நீங்கள் நிச்சயம் புகழ் ஏணியில் ஏறுவீர்கள் என்று நம்புகிறேன்.

"தீபாவளி மலர் உண்டா?" என்று இப்போது முதலே கடிதங்கள் வரத் தொடங்கிவிட்டன. "தீபாவளி உண்டா, அப்படியானால் கண்ணன் தீபாவளி மலரும் உண்டு" என்றே பதில் அளிக்க விரும்புகிறேன். தீபாவளி மலருக்கான விலையும் சேர்த்துத்தானே சந்தாதார்கள் சந்தா அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, "தீபாவளி உண்டு; தீபாவளி மலரும் உண்டு" என்ற நிச்சயத்துடன் இருக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பாலர்களுடைய கவி அரங்குக்குப் பாடல்கள் வந்த வண்ணமாய் இருக்கின்றன. நம் தமிழ் நாட்டுக் குழந்தைகள் பாடல் இயற்றுவதில் இவ்வளவு தூரம் பயிற்சி பெற்றிருக்கிறார்களே என்று ஆச்சரியமாயிருக்கிறது. மற்ற நாட்டுக்காரர்கள் நிச்சயம் பொறாமைப்பட வேண்டிய விஷயம் இது.

முதல் கவி அரங்கத்தைத் தீபாவளி மலரிலிருந்து தொடங்கலாம் என்பது என் எண்ணம். உங்கள் விருப்பமும் அப்படியேதான் இருக்கும் என்று எண்ணுகிறேன். மாறாக இருந்தால் தெரிவியுங்கள்; அதன்படியே செய்கிறேன்.

—ஆசிரியர்.

லீடர் மணி

'ஆர்வி'

கதிர்வேலு என்ற பையன் அவனிடம் வந்து ஏதேதோ கேட்டுப்பார்த்தான். மணிக்கு உள்ளூற உதைப்பாக இருந்தது. தெரியாத விஷயத்தைக் கேட்டு, உளறிவிடப் போகிறோமே என்ற கவலையும் இருந்தது. அதனால் கேட்ட கேள்விக்கு, "ஆமாம், இல்லை" என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லி வந்தான்.

கேட்ட கேள்விக்கு, 'உண்டு இல்லை' என்று பதில் சொல்பவர்களே அந்த ஊரில் இல்லை போலிருந்தது. அதனால் மணியைப் பற்றி மற்ற மாணவர்கள் கௌரவமாகவே எண்ணினார்கள். நிதானமாகப் பேசினாலே கௌரவம் உண்டு என்பதை மணி இங்கே தான் முதலில் கண்டு பிடித்தான். வாத்தியாருடைய கோட்டா கூட இன்று அவனை அசைக்கவில்லை. "என்ன சார், ஊர் கொஞ்சமாவது பிடிபட்டதா?" என்று அவர் கேட்டார்.

"கொஞ்சம் கொஞ்சமாகப் பிடிபட்டு வருகிறது, ஸார்!" என்றான் மணி.

அவன் சொன்ன தோரணையே மற்றப் பையன்களுக்குப் பிடித்துவிட்டது. "டேய், ஆள் பெரிய ஆளாக இருப்பான் போலிருக்குடா!" என்று அவர்கள் கிசுமுசுவென்று பேசிக்கொண்டார்கள். குமாருக்கு மட்டும் பெருமையாக இருந்தது. தான் முதன் முதலாகப் பிடித்த சிநேகிதன் நல்ல பெயர் வாங்கினால் பெருமையில்லாமல் எப்படிப் போகும்?

மணி அடித்ததும் குமாரும் மணியும் புட்பால் கிரௌண்டுக்குப் போனார்கள். அங்கே இரண்டு கோஷ்டியினர் விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்ட மணிக்கு வியப்பாக இருந்தது. கும் கும்மென்று பந்து சத்தத்துடன் எழும்பி, கோடியில் ஊன்றியிருந்த இரு கம்பங்களை நோக்கிப் போயிற்று. எல்லாப் பையன்களும் கண் மூக்குத் தெரியாமல் முட்டி மோதிக்கொண்டு பந்தை அடிக்கக் கும்பல் கூடினார்கள்.

மணி பார்த்துக்கொண்டே நின்றுவிட்டான். அதற்குள் குமார் அவனிடம் வந்து, "மணி,

உனக்கு இரண்டணவை நானே கட்டிவிட்டேன். நீயும் இனிமேல் மெப்பர்தான். வா, நாமும் போய்ச் சேர்ந்துகொள்ளலாம்'' என்ருன்.

மணிக்குச் சொரேர் என்றது. "எனக்கு நீ கட்டிவிட்டாயா? ஐயையோ..நான் விளையாட வர மாட்டேன்! ஊஹூம். மாட்டேன்!'' என்ருன். 'எனக்கு ஆடவே தெரியாது!' என்ற வார்த்தை அவன் உதடு வரையில் வந்துவிட்டது. ஆனுல் சொல்லாமல் தப்பித்துக்கொண்டான்.

"எனக்கு ரெண்டணு நீ திரும்பத் தர வேண்டாம். சும்மா வா. வந்து விளையாடு!'' என்ருன் குமார். மணி மறுக்கவே அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோய், கிரௌண்டில் நிறுத்தினன். வேறு வழியில்லாமல் மணி விழித்துக்கொண்டு நின்ருன்.

ஆட்டத்தின் விதிகள் தெரியாது; ஆட்டத்தின் போக்கும் தெரியாது; தன் கட்சியினர் யார் யார் என்றும், எதிர்க் கட்சியினர் யார் யார் என்றும் தெரியாது; கம்புகள் இரண்டு நட்டிருப்பதும் அதன் நடுவில் ஒருவன் இருப்பதும் ஏன் என்று தெரியாது. இப்படி அவன் என்ன செய்வதென்று தெரியாமல் சிறிது நேரம் மலைத்துப்போய் நின்ருன். ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு பந்தை அடிப்பதும், பந்து போய்ப் போய்த் திரும்பி வருவதுமாய் இருப்பதை அவன் பார்த்துக் கொண்டேயிருந்தான். இந்தச் சமயத்தில் தற்செயலாகப் பந்து அவன் காலருகே வந்துகொண்டிருந்தது. மணி தன்னையறியாமல் காலைத் தூக்கினன். பந்து வருவதும் காலால் உதைப்பதும் வெகு பொருத்தமாக இருந்தன. பந்து 'கும்' என்று தலைக்கு மேலாக எழும்பிச் சென்றது. பலர் அதை எட்டி எட்டிப் பிடிக்க முயன்ருர்கள். ஆனுல் பந்து யார் கைக்கும் அகப்படாமல், கோல்களுக்கு நடுவே இருந்த பையனுக்கும் அகப்படாமல் பாய்ந்து சென்றது.

உடனே, "கோல், கோல்!'' என்ற கூச்சல் எழுந்தது. எங்கிருந்தோ குமார் ஓடிவந்து மணியைக் கட்டிப் பிடித்துக்கொண்டு உற்சாகம் பொங்கக் கூவினன். மணி செய்வதறியாது அவன் பிடியில் அகப்பட்டுத் திணறினன்.

"புதுப் பையன்டா'' என்று ஒருவன் கூவினன்.

"என்னமாப் போச்சுடா, பந்து!'' என்று இன்னெருவன் கூறினன்.

எதிர்க் கட்சியினர் முகத்தில் பயத்தின் களை தாண்டவமாடியது. மிரள மிரள அவனைப் பார்த்தார்கள். "ஆளைப் பார்த்தால் சுத்தப் பட்டிக்காடு போலிருக்கிருன்; அடியைப் பார்த்தால் முரட்டு அடியாக இருக்கிறதே'' என்று ஒரு பையன் வாயைவிட்டே தன் ஆச்சரியத்தை வெளியிட்டான். அது மணியின் காதிலும் விழுந்தது. அவனுடைய உற்சாகம் மெல்ல வெளிக்காட்டத் தொடங்கியது.

"ஆடத் தெரியாது என்ருய். ஆனுல் ஒரே அடியில் கோல் போட்டுவிட்டாயேடா!'' என்று குமார் சொல்லச் சொல்ல அவனுக்கு விஷயம் ஒருவாறு விளங்கி வந்தது. அந்தப் பந்தை எதிர்க் கட்சியினர் தடுக்க முடியாதபடி அந்த இரண்டு கோல்களுக்கும் நடுவே அடிப்பதுதான் ஆட்டத்தின் வெற்றி என்பது புரிய அவனுக்கு வெகு நேரமாகவில்லை.

சிறிது நேரத்திற்கெல்லாம் தோற்ற கட்சியினர் தயாராக நிற்க, மணியின் கட்சியிலிருந்த ஒருவன் பந்தை நடுவில் வைத்துத் தன் பலம் கொண்ட மட்டும் உதைத்தான். அதை எதிரிகள் தடுக்க முயன்றார்கள். இவர்கள் ஓட, அவர்கள் ஓட ஆட்டம் உற்சாகமாக நடந்துகொண்டிருந்தது. மணி தன் இடத்தை விட்டு அசையாமலேயே நின்றான். எங்கிருந்தோ பந்து 'விர்' என்று பறந்து வந்தது. மணி சற்றும் எதிர்பார்க்கவில்லை. 'விண்' என்று 'பொறி' கலங்குவதுபோல் இருந்தது ஒரு கணம். அவன் மூக்கை உடைப்பதுபோல் மோதிவிட்டு பந்து பறந்து சென்றது. ஒரே ஆர்ப்பாட்டம், கூச்சல்! "சரியான ரபேட்" என்று சில மாணவர்கள் கூவினார்கள். "கோல் போட்டதற்குப் பரிசுடா" என்று ஒருவன் கத்தினான். மூக்கைப் பிடித்துக் கொண்டு மணி கிரௌண்டிலே உட்கார்ந்துவிட்டான். மூக்கு முகத்திற்கு முக்கியமான பாகமல்லவா? அவனறியாமலேயே கண்ணிலிருந்து கண்ணீர் பெருகியது. "மூக்கிலே ரத்தம் வருதா, பாருடோய்!" என்று ஒருவன் நையாண்டியாகக் கூச்சலிட்டான். சிலர் பரிதாபமாக அவனருகே ஓடி வந்து பார்த்தார்கள். சிலரால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

இத்தனைக்கும் ஆட்டம் நடந்து கொண்டேயிருந்தது. மணி, தன் மீது பந்தை அடித்தவன் இன்னான் என்று பார்த்துக்கொண்டு விட்டான். ஓடிப் போய் பதிலுக்குப் பதில் கையாலேயே அவன் மூக்கை உடைத்துவிடலாமா என்று ஆத்திரம் வந்தது. ஆனால் முடியவில்லை. சற்று முன் அவன் பார்த்த இடத்தி



விருந்தவன் இப்போது வேறு எங்கேயோ பார்த்துக் கொண்டு ஓடினன். இருந்தாலும் மணி ரோசம் தாங்கமாட்டாமல் பந்தை அடிக்கத் தூக்கிக்கொண்டு போனன். மூக்கைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது அத்தனை அவமானமாக இருந்தது. பந்தை உதைக்கப் போகும் சமயம். துரதிருஷ்டம் அவன் பங்கில் இருந்திருக்கவேண்டும். பின்னல் இருந்த ஒரு பையன் குறுக்கே காலைக் கொண்டுவந்து நீட்டி விட்டான். பந்தை அடிக்கப் போன மணி கால் இடறி, 'தொபக்கடீர்' என்று சுருண்டு விழுந்தான்.

அடிபட்ட அதிர்ச்சியில் வானம், பூமி எல்லாமே சுற்றுவதுபோலிருந்தது. பையன்களுடைய கேலிக் கூக்குரல் அவனைச் சுற்றிச் சுற்றி ஒலிப்பது போலிருந்தது. சிறிது நேரம்வரையில் அவன் எழுந்திருக்கவே இல்லை. இதைப் பார்த்துக்கொண்டிருந்த குமார் அவனருகில் ஓடி வந்து வெகு ஆதரவுடன் அவனை மெல்லத் தூக்கினன். மணிக்கு மண்டையின் பின்புறத்தில் சரியான அடிபட்டிருந்தது. மூக்கின் வலியும் அத்துடன் சேர்ந்து கொள்ளவே அவன் உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்திருக்க முடியாமல் கலங்கினன். எதிர்க் கட்சியில் ஒருவன், "டேய், யாராவது ஓடிப் போய் ஒரு 'ஸ்ட்ரெச்சர்' கொண்டு வாங்கடா!" என்று நகிடி பண்ணினன். இது அவன் மனப் புண்ணை அதிகமாக்கியது. எழுந்திருக்கவோ முடியவில்லை. இதற்குள் சிறிது நேரமாகிவிட்டதால் எல்லாப் பையன்களுமே ஆட்டத்தை அப்படியே நிறுத்திவிட்டு அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். இதைவிட அவமானம் வேறென்ன வேண்டும்! அடிபட்ட வலியைவிட அவமானப்பட்ட வலி அவனை மிகவும் துன்புறுத்தியது. எல்லாரும் அவனையே பரிதாபமாக பார்த்து கொண்டிருந்தது அவன் மனத்தை வாள் கொண்டு குத்துவது போலிருந்தது. கிராமத்தில் அவன் ஒரு நாள்கூட இப்படி அவமானப்பட்டதில்லை. அவன் தனக்கு நிகரில்லாத தலைவன் போல இருந்து வந்தான். இங்கே இந்த ஊரில் அவன் ஜம்பம் சாயாது போலிருந்தது. இந்த நினைப்பு வந்ததுமே அவன் ஆவேசத்தோடு எழுந்திருக்க முயன்ருன்.

இதற்குள் மற்றவர்கள் குமாரைப் பார்த்து, "டேய்! இன்றைக்கு அவனை மெதுவாகப் பத்திரமாய் வீடு கொண்டு போய்ச் சேர்த்து விடு" என்று யோசனை கூறி நிர்ப்பந்தித்தார்கள். குமாருக்கும் அதுதான் சரியென்று பட்டது. 'ஒன்று கிடக்க ஒன்று ஆகிவிடப் போகிறதே' என்று அவனை மற்றவர்கள் ' திகில் படுத்தி விட்டார்கள். குமாருக்குப் பெருமைப் பட்டுக்கொள்ள வழியில்லா விட்டாலும் மணி தாக்கப் பட்டது தானே தாக்கப்பட்டது போலிருந்தது. "மணி! இன்றைக்கு ஆடியது போதும். நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம். வா" என்று அவன் தோளைப் பிடித்துக்கொண்டான். மணியால் பதில் சொல்ல முடியவில்லை. குமார் அப்படிச் சொன்னதோடு நிற்காமல் மணியைக் கரகர வென்று இழுத்துக்கொண்டு

போனான். 'பாவம்!' என்ற பரிதாபக் குரல்கள் அவர்களைப் பின் தொடர்ந்தன.

"சூடு கண்ட பூனை நாளைக்கு இந்தப் பக்கம் வராதிடோய்!" என்று ஒருவன் உரத்த குரலில் சொன்னான். அவன்தான் எதிர்க் கட்சி 'காப்டன்' என்று மணிக்குப் பின்னால் தெரியவந்தது. குமாரைத் தவிர மற்ற யாரும் இந்தக் கட்சியில் அவனுக்காக அனுதாபப் படவில்லை. "என்னை எதற்கடா மெம்பராக்கினாய்?" என்று மணி சொல்லிக்கொண்டே குமாருடன் வெளியேறினான். தன் மானமும் தன்னோடு வெளியேறி வருவதாக அவனுக்கு ஓர் எண்ணம் மனசுக்குள் தோன்றிக்கொண்டேயிருந்தது. "மறுநாள் எப்படியாவது இதைப் பழி தீர்க்கவேண்டும்" என்று மனசுக்குள் எண்ணிக் கொண்டான்.

மறு நாள் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. அடிபட்ட அதிர்ச்சியினால் அவனுக்கு அன்றிரவே ஜுரத்தின் சின்னங்கள் தெரியத் தொடங்கின. பள்ளிக்கூடத்திற்கே போக முடியுமோ, முடியாதோ என்கிற அளவிற்கு உடல் நிலை வந்துவிட்டது. இருந்தாலும் பள்ளிக்கூடத்திற்குப் போகாமலிருக்க அவன் மனம் இடம் தரவில்லை. சேர்ந்த இரண்டு நாட்களுக்குள் மட்டம் போட்டால் அத்தையே வித்தியாசமாக நினைத்துக் கொள்ள மாட்டாளா? போதும் போதாததற்குக் கமலா வேறு கிண்டல் செய்யத் தொடங்கினாள். அவளுக்கு எப்படியோ சமாசாரம் எட்டியிருந்தது. "ஏண்டா, மணி! புட்பால் கிரௌண்டில் அடிபட்டாயாமே?" என்று துக்கம்

அருமையான சம்பவம்

சென்னையில் ஒரு பிரபல வக்கீல். அவரிடம் பெரிய பெரிய வழக்குகளே வந்தன. ஒரு சமயம் மதுரைக்காரரின் வழக்கு ஒன்று சென்னையில் நடந்தது. வக்கீல் வாதிக்காகக் கட்சி நடத்தினார்.

ஆறு மாதம் போல வழக்கு நியாயஸ்தலத்தில் நடந்தது. பல தடவை ஒத்திப்போட்டு வழக்கு நடந்து வந்தது. எல்லாச் சமயத்திலும் வக்கீல்களுடைய கட்சிக்காரர்கள் வருவது சாத்தியமில்லை. கடைசியாக ஒரு நாள் வழக்கு முடிவுற்றது. மறுநாள் நீதிபதி தம் தீர்ப்பைச் சொல்வதாக அறிவித்து விட்டார். வாதி அப்போது நேரில் வரமுடியவில்லை. அவர் மதுரையிலேயே இருந்தார்.

தீர்ப்பு வாதி வக்கீலுக்குச் சாதகமாக முடிவாகிவிட்டது. வாதி, வழக்கில் வெற்றி பெற்று விட்டார். இந்தச் சந்தோஷச் செய்தியைத் தம் கட்சிக்காரருக்குத் தந்தி மூலம் தெரிவிக்க எண்ணி, "கடைசியில் நியாயமே வென்றது" என்று தந்தி கொடுத்தார்.

அன்று இரவே வாதியிடமிருந்து பதில் தந்தி வந்தது. "அப்படியானால் சும்மா இருந்து விடாதீர்கள். மேல்கோர்ட்டில் அப்பீல் செய்யுங்கள்" என்று தந்தியில் கண்டிருந்தது.

வக்கீலுக்குச் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. கட்சிக்காரரே தம் பங்கில் நியாயம் இருப்பதாக எண்ணவில்லையே!

—தே. பார்த்தசாரதி, சென்னை-4.

விசாரிக்கத் தொடங்கிவிட்டாள். நல்ல வேளை, அத்தை காதில் அது சரியாக விழவில்லை. அவன் புஸ்தக மூட்டையைத் தூக்கிக் கொண்டு சிட்டாய்ப் பறந்து போனான். அவன் வகுப்புப் பையன்களில் இரண்டு பேர், "அடி பலமோ? ரத்தம் வரவே இல்லையே!" என்றெல்லாம் வந்து விசாரித்து விட்டுப் போனார்கள். அவர்களிடம் மணி சிறிதும் விட்டுக் கொடுக்காமல், "எல்லாம் குமாரால்தான் வந்தது. இல்லா விட்டால் நேற்றே ஒரு கை பார்த்திருப்பேன். இன்றைக்கு வந்து பாருங்கள்!" என்று பதில் சொல்லிவிட்டான்.

மாலை வகுப்பு முடிவடைந்ததும் எல்லாரும் மணியின் முகத்தையே பார்ப்பது போல் இருந்தது. அவன் முகம் கொஞ்சம் கூடச் சுரத்தாகவே இல்லை. கண்கள் நன்றாகக் கலங்கிச் சிவந்திருந்தன. உடம்போ குளிர்ந்து கூசுவது போலிருந்தது. கிரௌண்டிற்கு நடந்து போவது என்ன, வீட்டுக்கே நடந்து போகமுடியாது போல் இருந்தது. காலையில் வந்து விசாரித்து விட்டுப் போனவர்கள் எல்லாரும் இப்போது அவனுடைய வரவை மிக ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். குமாரும் அவன் பக்கத்திலேயே நடந்து வந்தான். அவர்களில் ஒருவன், "என்ன மணி! கிரௌண்டிக்குத்தானே?" என்று கேட்டான். மணி தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு தலையை அசைத்தான். ஒன்றும் வாய் திறந்து பேசவில்லை. சற்றுப் பொறுத்து மற்றொருவன் அருகில் வந்து, "காலையில் ஏதோ வீராப்புப் பேசினாயே. இப்போது கிரௌண்டிற்குத்தானே போகிறாய்?" என்று விசாரித்தான். "இல்லை" என்றான் மணி சுருக்கமாக.

"இல்லையா? பின்னே!"

மணி தலையை நிமிர்த்தவில்லை. குமாருக்குக் கூட அவன் பயந்து அரண்டு போய்விட்டதாகவே தோன்றியது.

"அவ்வளவுதானா?" என்றான் முதலில் கேட்டவன். "ஏன் வரவில்லை?" என்றான் இன்னொருவன்.

"எனக்கு மத்தியானத்தி லிருந்து ஜுரம்" என்றான் மணி. இதைக் கேட்டார்களோ இல்லையோ, மற்ற மாணவர்கள் எல்லாரும், "ஓஹோ, ஹோ!" என்று கொம்மாளத்துடன் பரிகாசம் செய்தார்கள். குமார் அவசரம் அவசரமாக மணியின் உடம்பைத் தொட்டுப் பார்த்தான். மணிக்கு உடம்பு நெருப்பாகக் கொதித்துக் கொண்டிருந்தது. ஆனால் பையன்களோ, "டேய்! இது வெறும் சாக்கு. அவனுக்கு வீட்டிலே போய், பத்து அரைச்சுப் போட்டு, கூழ்மோர் காய்ச்சிக் கொடுக்கச் சொல்லுடா, குமார்!" என்று நையாண்டி செய்துகொண்டே போனார்கள். (தொடரும்)

சென்ற இதழில் வெளியான

மாம்பழக் கூடையின் சரியான விடை:

மாமா அனுப்பிய பழங்கள்	25
குப்பன் எடுத்த பழங்கள்	8
சுப்பன் எடுத்த பழங்கள்	5

கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

[நீங்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தெளிவாகவும் விளக்கமாகவும் விடை சொல்லவேண்டும் என்பதே பேராசிரியர் விஞ்ஞானத்தின் கருத்து. உங்களை வெறுமே சிரிக்கச் செய்யவேண்டும் என்று விடை சொன்னால், அது பயனுள்ளதாக இராது. உங்களுக்குப் பயன்படவும் வேண்டும்; உங்களைத் திருப்தி செய்யவும் வேண்டும் என்பதே விஞ்ஞானத்தின் நோக்கம். ஆ—ர்]

கே. விசுவநாதன், திருச்சி.

பூமிக்குச் சமீபத்தில் உள்ள கிரகம் எது?

பூமிக்கு மிகவும் சமீபத்தில் உள்ள கிரகம் சுக்கிரன். அது பூமியிலிருந்து சுமார் இரண்டரைக் கோடி மைல் தூரத்தில் வரக்கூடும். அதனால்தான் அவ்வளவு பிரகாசமாகத் தோன்றுகிறது. ஆனால், ஹெர்மீஸ் (Hermes) என்னும் குட்டிக் கிரகம் (Asteroid) ஒன்று சில வேளைகளில் பூமியிலிருந்து 4,75,000 மைல் தூரத்தில் வந்து விடுகிறது. இதன் குறுக்களவு சுமார் முக்கால் மைலே உள்ளது.

கே. சதாசிவம், மதுரை.

சினிமாப் படம் தயாரிப்பது எவ்வாறு? சினிமாவில் ஏற்படும் பாட்டு, ஒலி இவற்றைப் பிலிமிலேயே புகுத்தி விடுகிறார்களா? அல்லது வேறு எவ்வாறு?

படம் பதிவு செய்யும்போது: சினிமாவில் திரையில் காட்டப்படும் படங்கள் முதலில் படம் பிடிக்கும் பிலிமில் படமெடுக்கப் படுகின்றன என்பது உனக்குத் தெரியும். இந்தப் பிலிம், அளவில் சிறியது; சுமார் ஓர் அங்குல அகலமே உள்ளது. இதையும் நீ பார்த்திருப்பாய். இந்த அகலத்தில் $\frac{9}{10}$ பகுதி படப்பதிவுக்கும், ஒரு விளிம்போரத்தில் மீதியுள்ள $\frac{1}{10}$ பகுதி ஒலிப்பதிவுக்கும் உபயோகிக்கப்படுகின்றன.

சினிமாப் படம் தயாரிக்கும்போது அதிலுள்ள நடிகர்கள் ஒரு மைக்கிரோபோன் (Microphone) என்னும் கருவியின் முன்னால் பேசவோ, பாடவோ செய்கிறார்கள். குரலின் ஒலியில் என்ன என்ன மாறுதல்கள் உண்டாகின்றனவோ, அவைகளுக்கு ஒத்தபடியாக அந்த மைக்கிரோபோனில் மின்சார ஓட்டம் அளவில் மாறுபடும். இந்த மின்சார ஓட்டத்தை ஒரு தனி வகையான மின்சார விளக்கின் வழியாக ஓடச் செய்கிறார்கள்.

அப்படிச் செய்வதால், அந்த மின்சார ஓட்டத்தின் வழியே செல்லும் மின்சார ஓட்டம் மாறுபடும். ஆகையால், அந்த விளக்கின் ஒளியும் அதற்கு ஏற்றபடி மாறுபடும். இந்த விளக்கொளியானது ஒரு மெல்லிய பிளவின் வழியாகச்சென்று, பிலிமின் விளிம்போரத்தில் ஒலிப்பதிவிற்கு என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் $\frac{1}{10}$ பகுதியில் படுகிறது.

இந்த ஒளியானது படம் பிடிக்கும் பிலிமிலுள்ள ரசாயனப் பொருள்களின்மீது பட்டு, கருமை நிறமான பொருள்களை இயற்று கிறது. இந்தக் கரிய நிறத்தின் அழுத்தமானது—அதாவது பிலிமின்மீது கருநிறப் பொருளின் கனமானது—பிளவின் வழியாகப் பிலிமின்மீது படும் ஒளியின் தீவிரத்துக்கு (Intensity) ஏற்றபடி மிகுந்தோ குறைந்தோ இருக்கும். ஆகவே மைக்கிரோபோனின் முன்னால் பேசப்படும் ஒலியானது எப்படி மாறுபடுகிறதோ, அப்படியே இந்தக் கரிய நிறத்தின் கனமும் மாறுபடும்.

பிலிமில் ஒலியைப் பதிவு செய்யும் வகைகளில் இது ஒன்று.

படம் காட்டும்போது: ஒலிப்பதிவு செய்யப்பட்ட பிலிமின் $\frac{1}{10}$ பகுதியின் வழியாக, படம் காட்டும் விளக்கின் (Projection Lantern) ஒளி விழுகிறது. அப்போது அதன் ஊடாகச் சென்று வெளிவரும் ஒளியின் தீவிரமானது பிலிமிலுள்ள கரிய நிறம் எப்படி எப்படியெல்லாம் மாறுபட்டிருக்கிறதோ, அதற்கு ஏற்றபடியே மாறுபட்டிருக்கும்.

இந்த ஒளியானது ஒரு 'ஒளி மின்சாரக் கலத்தின்' மேலே படும்படி செய்வார்கள். அதன்மீது படும் ஒளியின் தீவிரம் எப்படி மாறுபடுகிறதோ, அப்படியே அந்த மின் கலத்திலிருந்து இயற்றப்படும் மின்சார ஓட்டம் மாறுபடும். இப்படி மாறுபடும் மின் ஓட்டத்தை வேண்டிய அளவு பெருக்கி, அதைக்கொண்டு, ஒலிபெருக்கிக் கருவியை இயங்கச் செய்வார்கள். இக்கருவி சினிமாத்திரையின் அருகில் வைக்கப்பட்டிருக்கும். ஆகையால் சினிமாக் கொட்டகையில் உள்ள ஜனங்களின் காதுக்கு இது திரையிலிருந்து வருவது போலவே தோன்றும். சினிமாத் திரையில் காணப்படும் நடிகர்கள் பேசுவதுபோலவே தோன்றும்.

கே. சதாசிவம், மதுரை.

சினிமா நோட்டீஸ்களில் இருக்கும் படத்தை நாம் இடது பக்கம், வலதுபக்கம், சென்டர் எங்கிருந்து பார்த்தாலும் அது நம்மையே பார்ப்பது போலிருக்கிறதே, ஏன்?

பிரதிபலிக்கப்பட்ட ஒளியின் மூலமாகக் காணப்படும் பொருளானது, அந்த ஒளி எந்தத் திசையிலிருந்து கண்ணில் வந்து படுகிறதோ, அந்தத் திசையிலேயே இருப்பதுபோலத் தோன்றும்.

சினிமா நோட்டீஸ் அச்சடிக்கப்பட்டிருக்கும் காகிதத்தைப் போன்ற சுரசுரப்பான தளப்பரப்பு எதிலிருந்தாவது ஒளி பிரதிபலிக்கப்படுமானால், அந்த ஒளி சிதறும். அதாவது எல்லாப் பாகங்களிலும் பிரதிபலிக்கும்.

ஆகையால் நீ எந்தத் திசையிலிருந்து பார்த்தாலும், பிரதிபலிக்கப்படும் கிரணங்கள் உன் கண்களில் வந்து படும். அப்போது உன் கண்களில் எந்தத் திசையிலிருந்து கிரணங்கள் வந்து சேருகின்றனவோ, அத்திசையிலேயே படம் இருப்பதுபோல் தோன்றும். ஆகவே படத்திலுள்ள கண்களை நீ பார்க்கும்போது அவையும், நீ எந்தத் திசையாகச் சென்றாலும் உன்னையே பார்ப்பதுபோல் உனக்குத் தோன்றுகிறது. நீ சென்ற இடமெல்லாம் அவையும் உன்னைத் தொடர்கின்றன.

கதை: ஆர்வி

தூங்கும் அழகி

சித்திரம்: ஸாமி

நான் வெளி உலகத்தைப் பார்க்க வேண்டும். பார்த்த பிறகு தான் சாப்பிடுவேன்.
கிழவன் எவ்வளவோ மன்றாடியும் இளவரசியின் பிடிவாதம் தளரவில்லை. கிழ உருவத்தை மாற்றிக் கொண்டு ஜின் தேவதை சுய உருவில் தோன்றி........
ஆனால் ஒரு நிபந்தனை! நீ யாருடனும் வாய் திறந்து பேசக்கூடாது. பேசினால் நீ அந்த இடத்திலேயே தூங்கி கல்லாகி விழுந்து விடுவாய்!
சரி; நான் யாரிடம் போய்ப் பேசப்போகிறேன்!
பொழுது சாய்வதற்குள் திரும்பிவிட வேண்டும். இல்லையோ நீ கல்லாகி விடுவாய்! ஞாபகம் இருக்கட்டும்.
சரி, சம்மதம்.
இந்தா! இந்த மாத்திரையைக் கையில் வைத்துக்கொள் தண்ணீர் உனக்கு பாதை விடும். போகலாம்.
இளவரசி மாத்திரையை வாங்கிக் கொண்டு பல மாடங்கள், கூடங்களைக் கடந்து படிக்கட்டுகளேறி
ஆகா! தங்கக் கிளி சொன்னது சரி தான்! இந்த உலகம் எவ்வளவு அழகாக இருக்கிறது!
ஜின் சொன்னதை மறக்காதே! என்னோடுகூடப் பேசக்கூடாது. ஞாபகம் இருக்கட்டும்
எரியைச் சுற்றி வரும் போது பாலகன் சிலை கிடப்பதைப் பார்க்கிறாள்.

(தொடரும்)

புரியாத புதிர்

கே. சுந்தரேசன்

'குப்..குப்..குப்' என்று ஓடி வந்த திருவனந்தபுரம் பாஸஞ்சர் வேகமாக ஒரு பெரு மூச்சுடன் கும்பகோணம் ஸ்டேஷனில் வந்து நின்றது. மக்கள் அவசர அவசரமாக ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தனர்.

''கூலி..கூலி!'' என்று போர்ட்டர்களுடைய கூச்சலும், சாத்துக்குடி, சோடா விற்பவர்களின் கூக்குரலும் எழும்பின.

இன்னும் பத்தே நிமிஷங்களில் வண்டி கிளம்பிவிடும். முதல் மணி அடித்தாகிவிட்டது. கறுப்புச் சராய், கோட்டு, டை, பூட்ஸ், தொப்பி சகிதமாய், கையில் அழகான 'தோல் பை'யுடன் ஒருவர் இரண்டாவது வகுப்பில் ஏறி உட்கார்ந்து கொண்டார். அவர் 'கட்டாயம் ஒரு லட்சாதிபதியாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது.

அவரைத் தவிர இரண்டாவது வகுப்புப் பெட்டியில் ஒருவருமே இல்லை. வண்டி மெதுவாக நகர்ந்தது. அப்பொழுது சுமார் பதினான்கு வயதுள்ள ஒரு சிறுவன் நொண்டி, நொண்டி ஓடிவந்து அந்தப் பெட்டியில் தொற்றிக் கொண்டான். ''டேய்! டேய்! இது இரண்டாவது வகுப்பு..இதில் ஏறாதே! ஏறாதே!'' என்று ஓலமிட்டார் அவர். சிறுவன் அதைச் சட்டை செய்யவில்லை.

எண்ணெய் கண்டு பல வருஷங்களானதைப்போல இருந்தது அவன் தலை. ஆனால் அவன் கையில் இரண்டாவது வகுப்பு டிக்கெட் இருந்தது. அவன் கண்களை அடிக்கடி உருட்டி உருட்டிப் பார்ப்பதும், பல்லை இளிப்பதுமாகப் பைத்தியக்காரச் செய்கைகள் பல செய்து கொண்டே இருந்தான். தன்னைத் தவிர யாருமே கிடையாது என்று உட்கார்ந்திருந்த லட்சாதிபதிக்கு சிறுவனைக் கண்டதும் பெருத்த ஏமாற்றமாக இருந்தது. 'ஒரு பைத்தியக்காரச் சிறுவன் தன்னுடன் பிரயாணம் செய்வதா?' என்று நினைக்கும்போது அவருக்குக் கோபம் பொங்கி எழுந்தது.

வண்டி ஓடிக்கொண்டிருந்தது. அரைமணி நேரத்துக்கு ஒருமுறை அந்தச் சிறுவன் ஒரு சிறு பேப்பரில் எதையோ எழுதினான். அவனுடைய பார்வையில் எதையோ கண்டவர்போல் மருண்டார் அவர். அவர் கைகள் பலமுறை பைகளைத் தொட்டுப் பார்த்துக்கொண்டன. ஏதோ ஒரு பயங்கர எண்ணம் அவரை வாட்டியது போலும்! முத்து முத்தாக வேர்த்தது. அவருடைய கை, கால்கள்கூட சிறிது நடுங்கின. பிரமையுடன் விழித்

தார் அவர். இதையெல்லாம் பைத்தியக்காரச் சிறுவன் கவனித்துவிட்டுப் பல்லை இளித்தான்.

அவர் தன்னிடம் ஏதாவது பேசக்கூடும் என்று நினைத்தான் அந்தப் பையன். 'அவர் தன்னைக் கேள்விகள் கேட்பார் அல்லது தன்னை வண்டியைவிட்டு இறக்க முயற்சிகள் செய்வார்' என்று ஒவ்வொரு விநாடியும் பையன் எதிர்பார்த்தான். அவர் தன்னிடம் பேசப் பல சந்தர்ப்பங்களை உண்டாக்கினான் அவன். "தாங்கள் எதுவரையில் செல்கிறீர்கள்?" என்றும் கேட்டான். லட்சாதிபதியின் சிந்தனை கலைந்தது. "சென்னை!" என்று வேண்டா வெறுப்பாகக் கூறினார்.

"ஊம்! நானும் சென்னைக்குத்தான் போகிறேன்.. ஹி.. ஹி.." அசல் பைத்தியக்காரனைப் போல் உடலை வளைத்து வளைத்துச் சிரித்தான் பையன்.

"சென்னையில் தாங்கள் இருக்குமிடம்?"

இதைக் கேட்ட லட்சாதிபதியின் கண்களில் அனல் வீசியது.

பைத்தியக்காரச் சிறுவன், 'ஹி.. ஹி..' என்று சிரித்தான்.

"இட்லி.. இட்லி.. டீ..டீ.." என்று எழும்பிய ஒலிகள், "விடிந்துவிட்டது. வண்டி விழுப்புரம் ஸ்டேஷனில் நிற்கிறது" என்பதை அறிவித்தன. "தினசரி, பேப்பர்!" என்ற குரல்கள் கேட்டன.

"டேய்! பேப்பர்.. இன்று காலை பேப்பர் தானே? ஒரு பேப்பர் கொடு" என்று ஓரணாவை நீட்டினான் சிறுவன்.

பேப்பரை வாங்கிப் படித்துத் தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டான் அவன். பலமுறை படித்துவிட்டு அதை மடித்துத் தன் பையில் போட்டுக்கொண்டான். பேப்பரில் இருந்த விஷயம் அவனுக்கு மிகுந்த சந்தோஷத்தையே அளித்தது. அவன் முகத்தில் அது தெரிந்தது. இரவெல்லாம் பாதி மூடியகண்களால் பையனைப் பார்த்துக்கொண்டேயிருந்த அவருக்குத் தூக்கம் கண்களைச் சுற்றியது.

பையன் மெதுவாக எழுந்தான். அவர் அருகில் சென்று உட்கார்ந்துகொண்டு மெதுவாக அவர் தோல் பையை எடுத்துத் திறந்தான். அதிலிருந்து நோட்டுக் கட்டுகளையும், பல பேப்பர்களையும் எடுத்துத் திருப்பித்திருப்பிப் பார்த்தானேயன்றி எதையும் எடுத்துக் கொள்ளவில்லை. பிறகு தன் கையிலிருந்த 'காப்பியிங்' பென்ஸிலால் ஏதோ எழுதிக்கொண்டான். பென்ஸிலின் நுனியைத் தோல் பையின் பிடியில் வைத்துத் தேய்த்தான். இதையெல்லாம் தன் கடைக்கண்ணால் கண்ட அவருக்கு ஆச்சரியம் மேலிட்டது. தவிர ஒருவிதப் பயமும் அவரை வாட்டியது. 'சே! இவன் கண்டிப்பாய் ஒரு பைத்தியமே தான்' என்று தீர்மானித்தார் அவர்.

"தோற்றத்தில் பைத்தியக்காரனாய் இருந்தாலும் இவனுடைய செய்கைகள் எல்லாம் விநோதமாக அல்லவா இருக்கின்றன? நம் பையைத் திறந்து பார்த்த இவன் ஏன் ஒன்றையும் அதிலிருந்து எடுத்துக்கொள்ளவில்லை? ஒருவேளை..." அவர் மனம் ஏதேதோ சிந்தனையில் ஆழ்ந்தது.

சிறுவன் மெதுவாக அவரது கோட்டுப்பையில் கையை வைத்தான். அவர் பொறுமை எல்லையைக் கடந்து விட்டது. உடனே அவர் அவன் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு ஓங்கி அவன் கன்னத்தில் ஓர் அறை வைத்தார். பையன் மெதுவாக அபாயச்சங்கிலியைப் பிடித்து இழுத்துவிட்டான்.

வண்டி நின்றது. போலீஸ்காரர்கள், டிரைவர், கார்டு, எல்லோரும் ஓடிவந்தார்கள். உடனே அவர் பையனின் கைகளை இறுகப் பிடித்துக்கொண்டு, "திருட்டுப் பயல், ஸார்! நானும் பார்த்துக்கொண்டு வருகிறேன். ஏறியதிலிருந்து பைத்தியமாக நடித்தான். பின்பு நான் தூங்கும்போது பையில் கையை விட்டு... நல்லவேளை...கையும் களவுமாகப் பிடித்து விட்டேன்!" என்று மேல் மூச்சு, கீழ்மூச்சு வாங்கக் கூறிமுடித்தார்.

அவரது உடலெல்லாம் வேர்த்துக் கொட்டியது. ஒரு போலீஸ் கான்ஸ்டேபிள் பையனின் கைகளை இரும்புப் பிடியாக அழுத்திப் பிடித்துக் கொண்டான். ஆனால் அவர் போலீஸாரிடமிருந்து பதிலை எதிர்பார்க்காமலேயே திரும்பினார். உடனே, போலீஸ்காரன் "ஸார், ஒரு புகார் மனு தயாரித்துக் கொடுங்கள், உங்கள் விலாசத்துடன்" என்றான்.

இதைக் கேட்டதும் அவர் பதறிப் போனார். பிறகு, "இல்லை... இல்லை...வேண்டாம், விட்டுவிடுங்கள்!" என்று கூறினார்.

வண்டி மீண்டும் புறப்பட்டது.

போலீஸ்காரர்களும் தன்னுடன் ஏறி உட்கார்ந்ததைக் கண்டதும் அந்த மனிதரின்பாடு தர்மசங்கடமாய்ப் போய்விட்டது. அவர் பெருமூச்செறிந்தவாறு நெற்றி வேர்வையைத் துடைத்துக்

கொண்டு தோல்பையை இறுகக் கையில் பிடித்துக்கொண்டார். வேர்வைத் துளிகள் பட்டதும் பிடியிலிருந்த 'காப்பியிங்' பென்ஸிலின் சாயம் அவரது கையில் எறியது.

"இதோ பாருங்கள் ஸார்! 'காப்பியிங்' பென்ஸிலை வைத்துப் பிடியில் தேய்த்திருக்கிறான், பைத்தியம்!" என்று ஒரு தண்டுட் பேப்பரை எடுத்துத் தடைத்துப் போட்டார் அவர். பையன் மெதுவாக அந்தத் துண்டுப் பேப்பரைத் தன் கால்களால் நகர்த்தி அவர் அறியாமல் எடுத்துப் பையில் போட்டுக் கொண்டான்.

"போகிறான், ஸார்! பைத்தியக்கார சிறுவன். விட்டுவிடுங்கள்!" என்று வழியெல்லாம் சொல்லிக் கொண்டே வந்தார் அவர்.

"விட்டு விடுவதா?...கூடாது ஸார்...கூடாது. சின்ன வயசில் திருடவிடக் கூடாது. தவிர இவன் பைத்தியம் வேறு. நீங்கள் எங்களுடன் சென்னை வந்திறங்கியதும் ஸ்டேஷனுக்கு வந்து ஒரு புகார் எழுதிக் கொடுத்து விடுங்கள்" என்றனர்.

பையன் ஏனோ 'கொல்'லென்று சிரித்தான். போலீஸ்காரன் சற்று நடுங்கிப் போய், கையைத் தளர விட்டான். சென்னையில் வண்டியை விட்டிறங்கியதும் அனைவரும் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தார்கள்.

தன் கோட்டையும், 'டை'யையும் ஒருமுறை சரி செய்துகொண்டார் அந்த மனிதர். பையன் தன் உடலைப் பல கோணங்களில் ஒரு வளைப்பு வளைத்து எல்லோருடைய கவனத்தையும் தன் பக்கம் திருப்ப ஒரு கனைப்புக் கனைத்தான். "கும்பகோணம் பெரிய மிராசுதார் வீட்டில் கொலை! சுமார் பதினாயிரம் மதிப்புடைய சொத்து கொள்ளை போய்விட்டது. மிராசுதார் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்" என்று கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டிருந்ததைப் பார்த்துவிட்டு ஒரு சிவப்புப் பென்ஸிலால் அதை 'மார்க்' செய்துகொண்டிருந்தார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

அவரிடம் போலீஸ்காரன் ஒருவாறாக விஷயத்தைச் சொல்லி முடித்தான்.

அவரும், "பையன் முழுப்பைத்தியம்; தவிர வரும்போது திருட முயற்சிக்கையில் பிடித்து விட்டேன். போனால் போகிறான்; விட்டுவிடுங்கள்!" என்று கூறி முடித்தார். இதைக் கேட்ட பையன் இடி இடியென்று சிரித்து விட்டு, "ஸார்! ரொம்ப அவசரப்படறீங்களே! என் கதையைக் கொஞ்சம் கேட்டுவிட்டுப் போங்களேன்!" என்றான்.

"சரி சொல்லித் தொலை! சீக்கிரம் ஆகட்டும்!" என்று உறுமினார் அவர். சிறுவன் கூறத்தொடங்கினான்.

"நேற்று மாலை மணி ஏழு இருக்கும். தெருவில் நடமாட்டம் குறைந்திருந்தது. கும்பகோணம் பெரிய மிராசுதாரின் வீடு பூட்டியிருந்தது. அவர்கள் எல்லோரும் சினிமாவுக்குப் போயிருந்தார்கள். அப்பொழுது ஒருவர் வந்து வீட்டுக் கதவைப் பரக்கப்பரக்க அவசரமாகத் திறந்தார். அவர்மீது எனக்குச் சந்தேகம் தோன்றியது. தவிர அதே மனிதரை இரண்டு மூன்று நாட்களாகத் தொடர்ந்து பல நாகரிக உடைகளில் மிராசுதாரின் வீட்டுப் பின்புற ரஸ்தாவிலும்,

முன்புற ரஸ்தாவிலும் நான் பார்த்திருக்கிறேன். 'யாரோ ஊருக்குப் புதுமனிதர், பணக்காரச் சீமான்' என்று நினைத்திருந்தேன்.

"ஆனால், 'மிராசுதார் வீட்டில் இல்லாதபோது இவர் ஏன் கதவைத் திறக்கிறார்?' என்ற சந்தேகம் எனக்கு வலுத்தது. மறைந்திருந்து பார்த்துக்கொண்டிருந்தேன். வீட்டின் சொந்தக்காரர் போல் உள்ளே நுழைந்து கொள்ளையிடும் பேர்வழிகளைப்பற்றிப் பல முறை என் எஜமானர் சொல்லி நான் கேட்டிருக்கிறேன்.."

"உன் எஜமானரா! யார் அவர்?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"பிறகு சொல்கிறேன் மேலே கேளுங்கள்!

"சற்று நேரத்திற்கெல்லாம் மிராசுதார் திரும்பி வந்துவிட்டார். அவர் வீட்டுக்குள் நுழைந்தவுடனே ஏதோ பெரிய கூச்சல் கேட்டது. சற்றைக்கெல்லாம் அந்த மனிதன் நிதானமாக வெளியில் வந்து, கதவை பழயபடி மூடிக்கொண்டு வெளியேறினான்.

"நான், 'உடனே சத்தமிட்டு யாரையாவது அழைக்கலாமா? அல்லது என் எஜமானனிடம் ஓடிச் சென்று சொல்லலாமா?' என்று யோசிப்பதற்குள் அவன் தெரு முனை திரும்பிவிட்டான்.

"உடனே அவன் என்னை அறிந்துகொள்ளாமல் பதுங்கி அவனைப் பின்பற்றினேன். என் எஜமான், வீட்டுச் சாமான்கள் வாங்கக் கொடுத்த பணம் எனக்கு உதவியது. அவன் சென்னைக்கு இரண்டாவது வகுப்பு டிக்கெட் வாங்கினான். நானும் வாங்கினேன். அவனுடைய செய்கைகளை அறிய, பைத்தியக்காரனைப்போல் நடந்துகொண்டேன். வழியில் அவனுடைய செய்கைகளைக் குறித்திருக்கிறேன். அவன் என்ன களவாடிக்கொண்டுவந்திருக்கிறான் என்பதை அறியத் தோல் பையைச் சோதனையிட்டேன். ஏராளமான கரன்ஸி நோட்டுகளும், சில தஸ்தாவேஜிகளும், ஒரு பிச்சுவாக் கத்தியும் அதில் இருந்தன.

"அவன் ஏதாவது சந்தேகப்பட்டுத் தப்பிவிட்டாலும், அல்லது என்னைப் போலீஸில் ஒப்படைத்தாலும் என் குறிப்புகள் எனக்கு உதவும் என்ற ஒரே தைரியம் தான் என்னை எதற்கும் துணிந்திருக்கச் செய்தது. காப்பியிங் பென்ஸிலைத் தீட்டி வைத்திருந்து அவனது கைரேகைகளையும் இதோ எடுத்து வைத்திருக்கிறேன்." இவ்வாறு அவன் கூறி வரும்போதே அந்த லட்சாதிபதி மயங்கிக் கீழே விழுந்து மூர்ச்சையானார்.

"இவன்தான் அந்தக் கொலைகாரன்!" என்றான் சிறுவன்.

இதையெல்லாம் ஒன்றுவிடாமல் கேட்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் அசந்து போனார். "அப்பா, 1461 துரையார் கையில் ஒரு விலங்கை மாட்டு" என்று உத்தரவிட்டார். அந்த மனிதன் கையில் விலங்கு மாட்டப்பட்டது.

"ஆமாம்; உன் எஜமான் யார் என்பதைச் சொல்லவில்லையே நீ?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"என் எஜமானும் உங்களைப் போல ஒரு இன்ஸ்பெக்டர்தான். அவருடைய வேலையாள்தான் நான்! அவருக்கு ஒரு தந்தி கொடுத்துவிடுங்கள்!" என்றான் சிறுவன்.

தங்கச் சங்கிலி

வி. ஆர். பாலன்

அன்று சனிக்கிழமை! ராஜாவுக்கு ஹைஸ்கூல் கிடையாது. மாலை மணி நான்கு ஆனதும் அம்மா செய்து வைத்திருந்த டிபனைக் காலி செய்து விட்டு, காபியையும் குடித்துவிட்டுக் கிளம்பினான். அவன் சிநேகிதி ராணியின் வீட்டுக்கு.

அரைமைல் தூரத்தில் இருந்த ராணியின் வீட்டை அடைந்த ராஜாவை வீட்டு வாசலில் சங்கிலியால் கட்டப்பட்டிருந்த குச்சு நாய்க்குட்டி ஜிங்லி வாலைப் படபடவென்று ஆட்டியபடியே ஊளையிட்டு வரவேற்றது. தன் இரு கால்களையும் தூக்கிக்கொண்டு தாவியபடியே தன்னை அவிழ்த்து விடும்படி ராஜாவைக் கேட்டுக் குரைத்தது.

"எய் ஜிங்லி! உன்னை அவிழ்த்து விட்டுட்டு ராணிகிட்டே யார் குட்டு வாங்கறது? கொஞ்சம் இரு, ராணியை அழைச்சுக்கிட்டு வந்து அவிழ்த்துவிடறேன்" என்று ஜிங்லியிடம் கூறிய ராஜா வீட்டுக்குள் நுழைந்தான்.

ஹாலில் ராணியைக் காணோம். அவள் அப்பாவின் அறையில் நுழைந்து பார்த்தான் ராஜா. அங்கேயும் காணோம். ராஜா சமையலறையை நோக்கி நடந்தான்.

அங்கேயும் ராணியைக் காணவில்லை. ராணியின் அம்மா மட்டும் அடுப்பில் ஏதோ செய்துகொண்டிருந்தாள். "மாமி! ராணி எங்கே காணோம்?" என்று கேட்டான் ராஜா.

"ராணியா? பின்னல் தோட்டத்திலே ஹேமாவோட விளையாடிக்கிட்டு இருக்காளே" என்று பதிலளித்தாள் மாமி.

"ஹேமாவா! அவள் பம்பாயிலிருந்து வந்துட்டாளா?" என்று கேட்டுக்கொண்டே வெளியே வீட்டு வாசலுக்கு வந்து தோட்டத்தின் பின்பக்கம் ஓடினான். அங்கே ராணியும் ஹேமாவும் பந்து விளையாடிக்கொண் டிருந்தனர்.

ராணி அவனைக் கண்டதும் ஓடி வந்தாள். ஹேமாவை அருகில் அழைத்து, "டேய் ராஜா! இவள் தான் ஹேமா! எங்க மாமா பெண். நாகரிகத்தின் எவரெஸ்ட்! ஹேமா, இதோ இவன்தான் மிஸ்டர் ராஜா, என் நண்பன்" என்று சொல்லிக்கொண்டே ஹேமாவை ராஜாவுக்கு அறிமுகம்செய்துவைத்தாள்.

ராஜா ஹேமாவைக் கவனித்துப் பார்த்தான். இரட்டைப் பின்னல் முழங்கால் வரையில் தொங்கிக் கிடந்தது. பட்டுப் பச்சைப் பாவாடை. அதற்கேற்றாற் போல மஞ்சள் சட்டை. முகத்திலே கால் அங்குலம் பவுடர். காதிலே சிறிய ஸ்டார். கழுத்திலே ஒரு தங்கச் சங்கிலி. 'நாகரிகத்தின் எவரெஸ்ட்' என்று ராணி கூறியது சரிதான். பம்பாய்க் காரி அல்லவா? இருவரும் கைகூப்பி வணங்கினார்கள்.

"வா, ராஜா! ஹேமா ஒரு புதிய விளையாட்டைச் சொன்னாள்-அதை இங்கே இன்று விளையாடலாம்" என்று சொல்லிய ராணி கீழே விழுந்து கிடந்த டென்னிஸ் பந்தை எடுத்து வந்தாள்.

ஹேமா தன் வெண்கலக் குரலில் கணீரென்று கூறினாள். "இது ஒருவகைப் பந்து விளையாட்டு. இதில் இரண்டு முதல் ஐந்து நபர் வரை கலந்துகொள்ளலாம். முதலில் ஒருவர் பந்தை இந்தத் தோட்டத்தில் அவர் இஷ்டப்படி எங்காவது ஒளித்து வைத்துவிட வேண்டும். அப்போது மற்ற இருவர் கண்களையும் கட்டிவிட வேண்டும். பந்தை ஒளித்தபின் கண்கட்டை அவிழ்த்தால்—யார் பந்தை முதலில் கண்டு பிடிக்கிறாரோ அவர், அடுத்த முறை பந்தை ஒளிக்கவேண்டும். கண்டு பிடிக்க முடியாவிட்டால், இரண்டு பேரும் ஒளித்தவனுக்குப் பத்துத் தோப்புக் கரணம் போடவேண்டும்."

இந்தப் புதிய விளையாட்டைக் கேட்ட ராஜா, "சபாஷ்! இது அருமையான விளையாட்டு. முதலில் நான் பந்தை ஒளித்துவைக்கிறேன்" என்று சொன்னான். ஹேமாவும், ராணியும் சரியென்று ஒப்புக்கொள்ளவே அவர்கள் கண்களைக் கைக்குட்டையினால் கட்டிவிட்டுப்பந்தைஒருகுரோட்டன்ஸ் செடியின் நடுவில் ஒளித்துவைத்தான்! ராணியும் ஹேமாவும் கண் கட்டை அவிழ்த்துக்கொண்டு பந்தைத் தேடினர்.

ஐந்து நிமிஷம் ஆகியும் பந்தை அவர்கள் இருவராலுமே கண்டு பிடிக்க முடியவில்லை. அதைக் கண்ட ராஜாவுக்குப் பரம சந்தோஷம்! ஆனால் அவன் சந்தோஷம் அடுத்த கணமே வந்ததுபோலவே மறைந்தது. சிறு காற்று வீசவே குரோட்டன்ஸ் இப்படியும் அப்படியும் ஆடியது. அதே சமயம் மேலே தொத்தி வைக்கப்பட்டிருந்த டென்னிஸ் பந்து தொப்பென்று கீழே விழுந்தது. அருகில் நின்ற

ஹேமா ஓடி, பந்தை எடுத்துக் கொண்டாள்.

இப்போது ஹேமா ஒளிக்க வேண்டும்! ராணியும் ராஜாவும் தேடிப் பிடிக்கவேண்டும்!

ஆட்டம் சுவாரஸ்யமாக நடை பெற்றது. மணி ஆறு ஆகியபோது தான் ராஜா பந்தைக் கண்டுபிடித்தான். அந்த ஆட்டத்தோடு விளையாட்டை நிறுத்திக்கொள்ளலாம் என்று மூவரும் தீர்மானித்தனர். ஹேமாவும் ராணியும் கண்களைக் கட்டிக்கொண்டனர்.

ராஜா பந்தைச் சற்று முன் தீர்மானித்தபடி தோட்டத்தின் வேலியோரமாக இருந்த மாமரத்தின் பொந்தில் வைத்தான். பந்து பொந்துக்குள் 'பொதக்'கென்று விழுந்தது.

கட்டை அவிழ்த்துக் கொண்ட ஹேமாவும் ராணியும் தோட்டம் முழுவதும் அலசிப் பார்த்தும் பந்து கிடைக்கவில்லை. அதற்குள் இருட்டியும் விட்டது. பொந்துக்குள் கையை விட்டு எடுக்கப் பயந்த ராஜா, மறுநாள் பந்தை எடுத்துத் தருவதாகச் சொன்னான். பிறகு ஹேமாவிடமும் ராணியிடமும் விடை பெற்றுக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தான்.

* * *

மறுநாள் மணி எட்டு!

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஏதோ அருமையான சண்டைப் படம் ஒன்று 'மேட்னி' காட்டுவதாக விளம்பரம் செய்திருந்தனர். அந்தப் படத்தைக் காண ராஜா சரியாக ஒன்பது மணிக்குத் தன் சைக்கிளுடன் வீட்டை விட்டு வெளிக் கிளம்பினான்.

போகும்போதுதான் அவனுக்கு முதல் நாள் பந்தை மாமரப்பொந்தில் ஒளித்து வைத்தது நினைவு வந்தது. உடனே வேகமாகச் சைக்கிளை ராணியின் வீட்டை நோக்கி மிதித்தான்.

வீட்டில் ராணியும் இல்லை. ஹேமாவும் இல்லை. சமையலறையில் எட்டிப் பார்த்தான். மாமி மட்டும்சமைத்துக்கொண்டிருந்தாள். மாமியை ராணி எங்கே என்று கேட்க விரும்பாமல் தோட்டத்தின் பின்பக்கம் சென்றான். அங்கே குரோட்டன்ஸ்செடிகளுக்கெல்லாம் தண்ணீர் விட்டுக்கொண்டிருந்தான் வேலைக்கார ராமன்!

"ஏய் ராமா! ராணி - ஹேமா இவங்க எல்லாரும் எங்கே?" என்று கேட்டான்.

"அவங்க இரண்டு பேரும் ஐயாவோடே போலீஸ்ஸ்டேஷனுக்குப் போயிருக்காங்க. ஹேமா அம்மா

வோட தங்கச் சங்கிலி திருடு போயிடுச்சாம்'' என்றான் ராமன்.

"என்ன, தங்கச் சங்கிலி திருட்டுப் போயிடுத்தா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டே பந்து ஒளித்து வைத்திருந்த மாமரத்தின் அடியில் வந்து நின்றான். பந்தை எடுக்க மாமரப் பொந்துக்குள் கையை விட்டான். ஆனால் பொந்தின் அடிவரையில் அவன் கை எட்டவில்லை. கையை வெளியே எடுத்த ராஜா திரும்பினான்.

ராமன் ராஜாவையே பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான்.

"ஏ, ராமா! இங்கேவந்து இதைப் பொந்திலேருந்து எடுத்துக் கொடு" என்று கூறினான் ராஜா. ராமன் சிறிதும் எதிர்பாராதவிதமாக ஓடிவந்து ராஜாவின் காலில் விழுந்தான். கண்ணீர் விட்டுக்கொண்டே, "சாமி! மன்னிச்சுடுங்க! நான் தான் பணத்துக்கு ஆசைப்பட்டு, சங்கிலியைத் திருடி இந்தப் பொந்திலே ஒளித்துவைத்தேன். யார் கிட்டேயும் சொல்லிடாதீங்க! சாமி, நான் புள்ளகுட்டிக்காரன்! இனிமே இதுமாதிரி செய்யமாட்டேன்" என்று அழுதான். பிறகு எழுந்து பொந்திலே கையை விட்டு ஒரு பொட்டலத்தை ராஜாவிடம் எடுத்துக் கொடுத்தான்.

ராஜா ஆச்சரியத்துடன் வாயைப் பிளந்தபடியே அந்தப் பொட்டலத்தைப் பிரித்தான். அதற்குள் தங்கச் சங்கிலி இருந்தது. சங்கிலியைக் கையில் எடுத்தபடியே தோட்டத்திலிருந்து ராணியின் வீட்டுக்குள் நுழைந்தான். ராணியின் அறையை அடைந்து அவளுடைய அலமாரிக்குள்ளே தங்கச் சங்கிலியை வைத்துவிட்டுச் சத்தம் செய்யாமல் வெளியே வந்தான்.

"ராமா! இந்த விஷயத்தை யார் கிட்டேயும் நான் சொல்லவில்லை! இனி இம்மாதிரி வேலையில் ஈடுபடாதே! சங்கிலியை உள்ளே வச்சுட்டேன். அந்தப் பொந்திலே ஒரு பந்து கிடக்கும். அதை எடுத்து ராணியம்மா கிட்டே

கொடுத்துடு'' என்று சொல்லிக் கொண்டே சைக்கிளைத் தள்ளி ஏறினான்.

அதற்குப் பிறகு—

ராஜா எப்பொழுது ராணி வீட்டுக்கு வந்தாலும் ராமன் நன்றி வீசும் கண்களுடன் அவனைப் பார்த்துக் கும்பிடுவான். ராணிக்கோ, ஹேமாவுக்கோ அதன் காரணம் தெரியாது.

எல்லைக்கோடு

கே.எஸ்.பி

ஹென்றிக்கு எழுதப் படிக்கத் தெரியாது. காலையில் கோடரியோடு செல்வான். தூக்கமுடியாத விறகுச் சுமையோடு சாயங்காலம் வீடு திரும்புவான்.

அவன் மனைவி மேரிக்கு அசாத்திய ஆசை. ஆசைக்கும் ஓர் எல்லைக்கோடு கிடையாது!

வழக்கம்போல நடுப்பகல் நேரத்தில் காட்டில் ஒரு மரத்தை வெட்டிக்கொண்டிருந்தான் ஹென்றி. திடீரென்று ஒரு குரல் கேட்கவே அவன் ஸ்தம்பித்து நின்றான். திரும்பிப் பார்த்தபோது மனித உருவத்தையே காணவில்லை. ஆனால் தெளிவாக அந்தக் குரல் மாத்திரம் அவன் காதில் விழுந்தது.

“ஹென்றி! என்னை வெட்டாதே! உண்மையில் நான் ஒரு ராஜகுமாரி. ஒரு முனிவரின் சாபத்தால் இப்படி மரமாகிவிட்டேன். என்னை வெட்டாதிருந்தால் உனக்கு என்ன வேண்டுமோ கேள், தருகிறேன்....!”-மரத்திலிருந்து வெளிவந்த இந்தக் குரல் ஹென்றியை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. மரம் பேசுவதை இது வரையில் அவன் கேட்டதேயில்லை. மத்தியானச் சாப்பாட்டைக் கூடச் சாப்பிடாமல் ‘விர்’ ரென்று குடிசைக்குக் கிளம்பினான்.

“என்ன, வெறுங்கையுடன் வந்து விட்டீர்களே!” என்று ஆத்திரத்தோடு கேட்டாள் மேரி.

நடந்ததை விவரமாகச் சொன்னான். ஹென்றி!

“உடனே அந்த மரத்திடம் போய் நல்ல குடிசையாக ஒன்று வேண்டுமென்று கேளுங்கள்!” என்று துரிதப்படுத்தினாள் மேரி. ஹென்றிதான் மனைவிக்கு அஞ்சுபவனாயிற்றே!

* * *

மரத்தை அடைந்த ஹென்றி “நானும் மேரியும் வசிப்பதற்கு ஒரு நல்ல குடிசை வேண்டும்” என்றான்.

“சரி, வீட்டுக்குப் போ!” என்று மரம் பதிலளித்தது.

நல்ல குடிசையையும் சின்னத் தோட்டத்தையும் கண்ட ஹென்றி மகிழ்ச்சி தாங்காமல் துள்ளினான்.

“இப்போ என்னதைக் கண்டு விட்டாற்போல இப்படிக் குதிக்கிறீர்கள்! இந்தக் குடிசை எனக்குப் போதாது! நாளைக்கு ஒரு நல்ல வீடு வேணும் என்று கேளுங்கள்” என்று உறுமினாள் மேரி. ஹென்றிக்கு வருத்தம் தாங்கவில்லை. ஆனால் மனைவியை எதிர்த்துப் பேசத் தைரியமும் வரவில்லை. நல்ல குடிசையில்லாமல் தவித்த போது, அருமையான குடிசை

கிடைத்ததே என்றுதான் அவன் மகிழ்ந்தான். ஆனால் மேரியோ—

மறுநாள் பயபக்தியோடு மரத்தின் முன்னே போய் நின்றுகொண்டான் ஹென்றி.

“என் மனைவிக்கு அந்தக் குடிசை போதாதாம்; நல்ல வீடு ஒன்று வேண்டுமாம்!”

உடனே மரம் இப்படியும் அப்படியும் கிளைகளோடு ஆடியது. அது ஆடிய வேகத்தைக் கண்டு ஹென்றி நடுங்கிப் போனான்.

“சரி போ, வீடு கொடுத்துவிட்டேன்!”

பரக்கப் பரக்கக் காட்டிலிருந்து ஓடினான் ஹென்றி. குடிசை இருந்த இடத்திலே பெரிய வீடு ஒன்று இருந்தது. இப்போது மேரி நிச்சயம் மகிழ்வாள் என்றுதான் ஹென்றி நினைத்தான்.

ஆனால் உள்ளேயிருந்த மேரியைக் கண்டதும் அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவள் கண்களிலே நீர் பெருக்கெடுத்தது.

“நல்ல அரண்மனை வேண்டும் எனக்கு!” என்று விக்கல்களிடையே தெளிவாகக் கேட்டது அவள் குரல்.

இப்போது ஹென்றியின் நிலைமை தர்மசங்கடமாகிவிட்டது. எத்தனை தரம் மரத்தை இது வேண்டும் அது வேண்டும் என்றுகேட்டுக்கொண்டே இருப்பது! இருந்தாலும் மேரியை எதிர்த்துப் பேச அவனால் முடியவில்லை.

வழக்கம்போல மரத்துக்கு எதிரே வந்து நின்றுகொண்டு, “அரண்மனை வேண்டுமாம் என் மேரிக்கு!” என்றான்.

இந்தத் தரம் மரம் மிகவும் பலமாக அசைந்ததால், இரண்டு மூன்று கிளைகள் ஒடிந்து கீழே விழுந்தன.

“போ போ! நீ கேட்டதைக் கொடுத்துவிட்டேன்!”

ஹென்றி மகிழ்ச்சியோடு ஓடினான். தொலைவில் பளபளக்கும் அரண்மனை தெரிந்தது. மேரி அறை நடுவிலே பட்டும் ஆபரணமும் ஜொலிக்க அழகுப் பிம்பமாக நின்றுகொண்டிருந்தாள். அவளைச் சுற்றி வேலையாட்களும் பணிப்பெண்களும் அவள் இடும் கட்டளைக்காகக் காத்து நின்றனர்.

ஆனால் மேரியின் முகத்திலே மகிழ்ச்சி இல்லை.

ஹென்றி திடுக்கிட்டான்.

"என்ன மேரி! இப்போதும் உனக்குத் திருப்தி இல்லையா?"

"எதையாவது உளறுகிறீர்கள்! அரண்மனையில் இருந்து என்ன பிரயோஜனம்? என்னை ராணியாக்கச் சொல்லுங்கள்!"

ஹென்றிக்கு மூச்சே நின்றுவிடும் போல இருந்தது. மேரி, ராணியென்றால் அவன் ராஜாவாகவேண்டுமே? தன்வரைக்கும் அவனுக்குத் துளியும் அதில் விருப்பமில்லை.

"என்ன யோசிக்கிறீர்கள்! நீங்கள் ராஜாவாக வேண்டுமென்ற அவசியமில்லை. நான் ராணியானால் போதும்!"

காலையில் ஹென்றிக்கு உடல் முழுவதும் வலித்தது. மேரியின் ஆசை இப்படி எல்லைக்கோடின்றிப் படர்கிறதே என்று இரவெல்லாம் சிந்தனை செய்தான்.

மிகுந்த சோர்வோடு மறுநாள் காட்டை அடைந்து, "எ மரமே! என் மனைவி பேராசைக்காரி; அவளைத் தயவு செய்து ராணியாக்கி விடு!" என்றான்.

ஹென்றியின் நிலைமையை எண்ணி நகையாடுவதைப் போல மிகவும் வேகமாக மரம் அசைந்தது. படபடவென்று பல கிளைகள் முறிந்து தரையில் விழுந்தன. பசும் இலைகள் தரையிலே குவிந்தன.

*   *   *

அரண்மனையை அடைந்த போது மேரி சிம்மாசனத்தில் வீற்றிருப்பதைக் கண்டான் ஹென்றி. அவளைச் சுற்றி மந்திரிகளும் சிற்றரசர்களும் தூதுவர்களும் அணிவகுத்து நின்றனர். சாமரம் வீசினர்.

மேரியோடு அன்று முழுவதும் பேசவே சந்தர்ப்பம் கிடைக்கவில்லை ஹென்றிக்கு. இஷ்டப்படி எல்லாருக்கும் கட்டளை இட்டாள் மேரி.

மறுநாள் காலையில்தான் மேரியோடு பேச அவனுக்கு அவகாசம் கிடைத்தது. இப்போது நிச்சயம் மேரி மகிழ்வாள் என்று அவன் நம்பினான்.

"என்ன ராணி! இப்போது சந்தோஷந்தானே!"

"யார் சொன்னது? இந்தச் சூரியனும் சந்திரனும் நான் சொல்வதைக் கேட்கமாட்டேன் என்கிறுர்கள். நான் கட்டளையிட்டபோது சூரியன் நேற்று மறையவில்லை. அந்தச் சந்திரனும் நான் சொன்னபோது வானத்தில் தோன்றவில்லை. அவர்களுக்கு அவ்வளவு திமிர்? மரத்திடம் சென்று என்னை அவர்களுக்கும் ராணியாக்கும்படி சொல்லுங்கள்!"

"என்னது, உனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது, மேரி! பிடித்துத் தள்ளினுல்கூட இனி மேல் நான் அந்த மரத்தை ஒன்றும் கேட்க மாட்டேன்; எனக்குப் பயமாக இருக்கிறது!"

"பயமா! நான் கட்டளையிடுகிறேன்; ராணியின் கட்டளை, ஞாபகமிருக்கட்டும்!

"எப்படியாவது நாசமாய்ப் போ! ஒரேயடியாக நீ அழியப் போகிறுய்!" என்று வேகமாகக் காட்டுக்கு ஓடினுன் ஹென்றி.

"மரமே! என் மனைவியின் ஆசை தணியவில்லை; இன்னும் அவளை....!"

சொல்லி முடிப்பதற்குள் மரம் பெருத்த ஒலியோடு, மிகவும் வேகமாக ஆடியது. கிளைகள் அனைத்தும் முதலில் முறிந்தன. விழுதுகள் தரையில் விழுந்தன; கடைசியில் இலைகள் முழுவதும் உதிர்ந்தன.

ஹென்றி ஒரேயடியாக நடுங்கிவிட்டான். தலையைக் கெட்டியாகத் தாங்கிக்கொண்டே, மேரியை நோக்கி ஓடினுன்.

அங்கே—

மேரி பழைய மேரியாக ஓட்டைக் குடிசையில் சட்டி, பானைகளோடு உட்கார்ந்திருந்தாள். ராணியைக் காணும், அரண்மனையையும் காணும்!

சிமமதியோடு உள்ளே நுழைந்தான் ஹென்றி!

செல்லாத நாலணா

'தமிழ்த்தம்பி'

நாராயணன் 'வேகுவேகென்று' நடந்துகொண்டிருந்தான். அப்பொழுது கீழே ஒரு நாலணா நாணயம் கிடப்பதை அவன் கண்கள் கண்டுவிட்டன. உடனே ஆவலுடன் அதைக் குனிந்து எடுத்தான். என்ன ஏமாற்றம்! அது ஒரு செல்லாத நாலணா. 'சரி, இருக்கட்டும்' என்று சட்டைப்பையில் போட்டுக்கொண்டான்.

வீட்டிற்கு வந்ததிலிருந்து திண்ணையில் உட்கார்ந்தவண்ணம் அந்தச் செல்லாத நாலணா நாணயத்தை எப்படி மாற்றுவது என்ற சிந்தையிலேயே ஆழ்ந்திருந்தான், நாராயணன். எந்தக் குருடன் கையில் கொடுத்தாலும் அது செல்லாத நாலணா என்று கண்டுபிடித்துவிடுவான். அப்படிப்பட்டதை எப்படிச் செல்லவைப்பது? செல்லச் செய்துதான் ஆகவேண்டும். அதற்கு எந்த வழியும் அவன் மூளையில் தோன்றவில்லை. ஆனால் குழம்பிக்கொண்டிருந்தது.

அப்பொழுது உள்ளிருந்து "டேய், நாராயணா!" என்று அப்பா கூப்பிடும் குரல் கேட்டது. எழுந்து உள்ளே போனான். அவன் அப்பா ஐந்து ரூபாய் நோட்டுக்கு சில்லறை வாங்கி வரச் சொன்னார். நோட்டை வாங்கிக்கொண்டு பல சரக்குச் செட்டியார் கடையை நோக்கி நடந்தான். திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. ஆம், அந்தச் செல்லாத நாலணாவை மாற்றுவதைப்பற்றித்தான்.

செட்டியார் நல்லவர். நோட்டை வாங்கிக்கொண்டு அவர் ஐந்து ரூபாய்களுக்குச்

சில்லறை எண்ணி வைத்தார். அதை நாராயணன் சரி பார்க்க எண்ணினான். அப்படி எண்ணும் சமயத்தில் செட்டியாருக்குத் தெரியாமல் அவன் கையில் மறைத்து வைத்திருந்த தன்னுடைய ஓர் அணாவை, வேண்டுமென்றே செட்டியார் கொடுத்த சில்லறையுடன் சேர்த்துவிட்டான். ஐந்து ரூபாயையும் எண்ணி முடித்ததும், "செட்டியாரே! ஓர் அணா அதிகமாக இருக்கிறது. இந்தாருங்கள்!" என்று கூறி ஓர் அணாவைச் செட்டியாரிடம் கொடுத்தான், நாராயணன்.

"அதிகமாக இருக்கிறதா?" என்று செட்டியார் ஆச்சரியத்துடன் கூறிவிட்டு மறுபடியும் ஒரு முறை எண்ணிப் பார்த்தார். ஓர் அணா அதிகமாகத்தானே இருக்கும்? ஓரணா குறைந்தாலும் குறையுமே தவிர அதிகமாக இருக்காதே என்று எண்ணினார் செட்டியார். சரியென்று ஓர் அணாவை எடுத்துப் பெட்டிக்குள் போட்டுக் கொண்டார். நாராயணன் சில்லறையைப் பொட்டலமாகக் கட்டிக்கொண்டு வீட்டிற்கு விரைந்தான்.

சிறிது நேரத்தில் நாராயணன் செட்டியார் கடையை நோக்கி ஓட்டம் ஓட்டமாக ஓடினான். செட்டியாரிடம் இரைக்க இரைக்க, "செட்டியார், செட்டியார்! நீங்கள் கொடுத்த சில்லறையில் ஒருசெல்லாத நாலணா இருந்துவிட்டது. அப்பா எண்ணிப் பார்க்கும்போது கண்டு பிடித்துவிட்டார். என்னை அடிக்காத குறையாய் விரட்டிவிட்டார். தயவு செய்து வேறு கொடுங்கள்!" என்று அழாக் குறையாகக் கூறி, செல்லாத நாலணாவைச் செட்டியாரிடம் கொடுத்தான்.

செட்டியார் சந்தேகப்பட்டார். செல்லாத வேறு நாலணாவைக் கொண்டுவந்துவிட்டானோ! ஆனால் அவன் ஓர் அணா அதிகமாக இருக்கிறதென்று திருப்பிக்கொடுத்ததை

டாக்டர், டேய் மாது! ஊரிலே யெல்லாம் என்னைப்பத்தி என்ன பேசிக்கிருங்க?

மாது: நீங்க மருந்துலே தண்ணீரை ரொம்பக் கலக்கித் தர்றீங் கன்னு பேசிக்கிருங்க!

டாக்டர்: அப்பப் பரவாயில்லே. பச்சைத் தண்ணியையேதான் தர்ருர்னு பேசிக்கலியே?

—V.S. ராஜு, கோயமுத்தூர்.

எண்ணியதும் கள்ளங்கபடற்ற பையன் தான் என்று தீர்மானித்துக் கொண்டார். பின்னே யாராவது அதிகமாக இருந்தால் திருப்பிக் கொடுப்பார்களா? ஆகவே அவன் சொல்வது பொய்யாக இருக்காது என்று அந்தச் செல்லாத நாலணாவை வாங்கிக்கொண்டு அதற்குப் பதிலாக வேறு ஒரு நல்ல நாலணா நாணயத்தைக் கொடுத்தனுப்பினர்.

நல்ல நாலணாவை வாங்கிக் கொண்டு திரும்பிய நாராயணன் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவ மாடியது. பின்னே தாண்டவ மாடாமல் என்ன செய்யும்? செட்டியாரிடம் கொடுத்து மாற்றிக் கொண்டு போன அந்தச் செல்லாத நாலணா எது என்று நினைக்கிறீர் கள்? அவன் கண்டெடுத்தானே அதே செல்லாத நாலணாதான்! தூண்டில் போட்டுத்தானே மீனைப் பிடிக்கவேண்டும்! ஓரணு போனாலும் மூன்றணு லாபந்தானே என்ற ஆனந்தம் அவனுக்கு. அணவைப் பையில் போட்டுக் கொண்டு, சந்தோஷத்தால் துள்ளிக் குதித்துக்கொண்டே ஓடினன் வீட்டை நோக்கி. அந்த நாலணாவை எப்படிச் செலவு செய்வதென் பதைப் பற்றிப் பலவிதமான எண்ணங்கள் பளிச்சிட்டன.

வீடு வந்ததும், மனத்திருப்தி யுடன் அந்த நாலணாவைத் தட விக் கொடுக்கும் நோக்கத்தில், சட்டைப் பையின்மேல் கையால் தடவினன். சுருக்கென்றது! எங்கே? எங்கே, அந்த நாலணா? பரபரப்புடன் பைக்குள் கையை விட்டுத் துழாவினன். காசைக் காணோம்! பையிலிருந்த சிறு துவாரத்தின் வழியே ஒரு விரல் நுழைந்தது. சட்டையின் கிழிசல், அவன் மனத்தையே கிழித்து விட்டதுபோலிருந்தது. அவன் மனம் சமாதானமடையவேயில்லே. ஏமாற்றியதற்கு ஓரணு அபராதம் போல் தண்டம் கொடுக்கும்படி நேர்ந்ததை அவன் மனம் ஆராய்ந்தது. இனி யாரையும் எதற்குமே ஏமாற்றக் கூடாது என்னும் முடிவுக்கு வந்த நாராயணன் திருப்தி யுடன் பெருமூச்சு விட்டான்.

வெள்ளைக் குயில்

ராஜன்

காலை எட்டு மணி இருக்கும். தாமு காபி சாப்பிட்டு விட்டு, பங்களா பால்கனியில் நின்று வெளியே பார்த்தான்.

எதிரே, சிறிது தூரத்தில் அமைந்திருந்த அந்தப் பெரிய பங்களாவைப் பார்த்தான். பங்களாவின் வெளியே ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் இரண்டு கான்ஸ்டேபிள்களும் நின்று ஏதோ கச முசவென்று பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தப் பங்களா, நீதிபதி நீலமேகத்துக்குச் சொந்தமானது. அங்கே போலீஸ்காரர்கள் அவ்வளவு காலையில் வரக் காரணம் என்ன?

பங்களா வராந்தாவில் நாய்க் குட்டியை மடியில் வைத்துக் கொண்டு சோகமாக உட்கார்ந்திருந்தாள் நீதிபதியின் மகள் மஞ்சுளா. அவள் முகம் ஏனோ அப்படி மாறிப் போயிருந்தது. அவள் குளிருக்கு இதமாக வராந்தாவில் வெயிலில் உட்கார்ந்து, ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

தாமு தன் அறைக்குச் சென்றான். பீரோவில் பதித்திருந்த நிலைக் கண்ணாடியின் முன் நின்று தலையைச் சீவிவிட்டுக்கொண்டான். சட்டையை இழுத்து விட்டுக்கொண்டு கீழே இறங்கினான். காலில் ஸ்லிப்பர்களை மாட்டிக் கொண்டு மஞ்சுளாவின் பங்களாவை நோக்கி நடந்தான்.

இன்ஸ்பெக்டரும் போலீஸ்காரர்களும் இன்னும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். நீதிபதியின் வீட்டில் திருடன் புகுந்து விட்டானோ என்று தாமுவுக்குச் சந்தேகமாயிருந்தது!

கேட்டைக் கடந்து, காம்பவுண்டிற்குள் அமைந்திருந்த ஒரு மரத்தின் அடியில் நின்றுகொண்டு மஞ்சுளாவைப் பார்த்தான். அவள் அவன் வந்ததைக் கவனிக்கவே யில்லை! அப்படி என்னதான் யோசனையோ?

தொண்டையைக் கனைத்து விட்டுக்கொண்டு, "மஞ்சுளா" என்று செல்லமாகக் கூப்பிட்டான்.

அவள் திரும்பிப் பார்த்தாள். அவள் முகத்தில் புன்முறுவல் தோன்றி மறைந்தது. இத்தனை நாள் சிரித்துக் குதித்துக்கொண்டு எழுந்து ஓடி வருவாளே, அப்படியெல்லாம் இன்று ஏன் ஓடிவரவில்லை?

தாமு மெல்ல நடந்து சென்று அவள் பக்கத்தில் உட்கார்ந்தான். "இதோ பார்! இன்று ஏனோ ஒரு மாதிரி யிருக்கிறாய்! சுற்றி வளைக்காமல் கேட்பதற்குப் பளிச்சென்று பதில் சொல்லு! தப்பறியும் கதைகளில் வரும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டேபிள்களும் இங்கே எதற்காக நின்று அப்படி ஓயாமல் பேசிக்கொண்டிருக்கிறார்கள்? பங்களாவில் எவனாவது திருடன் புகுந்து விட்டானோ?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்றாள் அவள்.

"இதோ பார், மஞ்சுளா! நடந்ததைக் கொஞ்சம் விவரமாகத்தான் சொல்லேன்!"

"ஐந்து வருஷத்துக்கு முன்னே ஒரு பெரிய திருட்டுக் கேஸ் நடந்தது. அந்தக் கேஸைப்பற்றி எல்லாப் பத்திரிகைகளும் பிரமாதப்படுத்தின. மாயாண்டி என்னும் பயங்கர கொள்ளைக்காரன் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்தான். அந்தக் கேஸை நடத்திய நீதிபதி என் அப்பா! அவர் மாயாண்டிக்குத் தண்டனை கொடுப்பதற்குமுன், 'நீ ஏதாவது சொல்ல வேண்டுமா?' என்று கேட்டார். அதற்கு மாயாண்டி சிரித்துவிட்டு, 'யுவர் ஆனர்! நீங்கள் எத்தனை வருஷம் எனக்குத் தண்டனை கொடுக்கிறீர்களோ, அத்தனை வருஷம்தான் உயிரோடு இருப்பீர்கள்!' என்றான். அதைக் கேட்ட என் அப்பா பயப்படவில்லை! சிரித்துக் கொண்டே, 'அப்படியானால் இரண்டு பேருக்குமே பத்து வருஷம் இருக்கட்டும்!' என்றார். இப்போது ஐந்து வருஷங்கள் ஆகிவிட்டன. ஆனால் அதற்குள் மாயாண்டி சிறையிலிருந்து தப்பிவிட்டான். அதுவுமல்லாமல், இரவு என் அப்பாவின் அறைக்கு வந்து போயிருக்கிறான். நல்லகாலமாக அப்பாதான் ஊரில் இல்லையே! பெங்களூரிலிருந்து இன்றைக்கு வருகிறார்!" என்றாள் மஞ்சுளா.

"மேலே போய்ப் பார்க்கலாம்!"

இருவரும் மாடி மேல் சென்று நீதிபதியின் படுக்கை அறையைப் பார்த்தார்கள். மாடி ஜன்னல் கம்பிகளில் இரண்டைக் காணோம்! தண்ணீர்க் குழாயைப் பிடித்துக் கொண்டு மேலே வந்து ஜன்னல் கம்பிகளை அகற்றிவிட்டு உள்ளே நுழைந்திருக்கிறான். கீழே கம்பளத்தில் காலடிகள் தெரிந்தன.

"சரிதான்! உன் அப்பா வந்ததும் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்?" என்றான் தாமு.

"அதற்குத்தான் இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார். திருடன் இங்கே எங்கேயாவது மலைப் பிராந்தியத்தில் ஒளிந்துகொண்டிருப்பான். இங்கே வரும்போது

பிடித்துவிட வேண்டுமென்று திட்டம் போட்டிருக்கிறார்!"

"அவ்வளவு சுலபமாகத் திருடன் அகப்பட்டுவிடமாட்டான்!" என்று சொல்லி விட்டு, தனது பங்களாவைநோக்கி நடந்தான். தோட்டத்தில் பூச்செடிகளுக்குத் தண்ணீர் வார்த்துக் கொண்டிருந்த முனியன், "தம்பி, காலையிலே ஓர் அதிசயம் பார்த்தேன்! வெள்ளைக் குயில் ஒன்று இந்தப் பக்கமாப் போச்சு! என் கண்ணாலே பார்த்தேன்!" என்றான்.

"வெள்ளைக் குயிலா? குயில் எங்கேயாவது வெள்ளையாக இருக்குமா? உனக்கு ஏதாவது மூளைக் கோளாறு ஏற்பட்டு விட்டதா?"

"நிஜமாகச் சொல்றேன்! இந்த மலைப் பக்கமாக இருந்து பறந்து வந்தது! நாளைக்காலையிலே நான் காட்டுகிறேன், பாருங்கள்!"

தாமு சிரித்துக்கொண்டே மேலே போய்விட்டான். அவன் மனம் வேலை செய்தது! வெகு நேரம் யோசனை செய்தான். பிறகு அந்த வெள்ளைக் குயிலைப் பார்க்காமல் விடுவதில்லை என்று முடிவு செய்தான். எப்படியிருந்தாலும் அந்தக் குயில் மாலை நேரத்தில் அதனுடைய இருப்பிடத்திற்குத் திரும்பிச் செல்ல வேண்டாமா? பால்கனியில் நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து விட்டான். மாலை நான்கு மணியிலிருந்தே வானத்தைப் பார்த்துக்கொண் டிருந்தான்.

அவன் கழுத்து வலிக்க ஆரம்பித்தது. ஆனால் அந்த வலி வீண் போகவில்லை! விளக்கு வைக்கும் சமயத்தில் அந்தக் குயில் வந்தது! ஆகா! அது வெள்ளைக் குயில் தான். ஆனால் முனியன் சொன்ன மாதிரி நிஜமான வெள்ளைக் குயில் அல்ல! பார்ப்பதற்குக் கொஞ்சம் வெள்ளையாக அதாவது சாம்பல் நிறமாக இருந்தது. அதன் உடம்பில் ஏதோ வெள்ளையாக ஒட்டிக் கொண் டிருக்கிறது. காலையில் பார்ப்பதற்கு இன்னும் வெள்ளையாக இருந்திருக்கலாம்!

தாமு கிடுகிடுவென்று கீழே இறங்கி ஓடினான். சைக்கிளை எடுத்துக்கொண்டு அந்த வெள்ளைக் குயிலைத் தொடர்ந்து சென்றான்!

அலாரம் டைம்பீஸ் பரிசுப் போட்டியில்

பரிசு பெற்ற மாணவன்

N. A. பாலகிருஷ்ணன், (B. 160) ராசிபுரம்

அடுத்த இதழில் பரிசுக் கதை வெளியாகும்.

அது எங்கேயெல்லாமோ வளைந்து வளைந்து சென்று ஒரு பெரிய கட்டிடத்தின் மீது உட்கார்ந்தது.

ஊருக்கு அப்பால் அமைந்திருந்த அந்தக் கட்டிடத்திற்கு அருகில் சென்றான் தாமு. அது ஒரு பெரிய ரொட்டிக் கிடங்கு! ரொட்டி செய்வதற்கான மாவு மூட்டைகள் ஏராளமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த இடம். அந்த இடத்திலே வசிக்கும் குயிலின் உடம்பு முழுவதும் வெள்ளையாகத் தெரிவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லையே!

ஆனால் அதே சமயத்தில் அவனுக்கு இன்னொரு யோசனை உதித்தது! ரொட்டிக் கிடங்கின் வெளியே சைகிளை நிறுத்திவிட்டு, உள்ளே சென்றான். மானேஜரிடம், "இங்கே, இப்போது எத்தனை பேர் வேலை செய்கிறார்கள்?" என்று கேட்டான்.

"இருபது பேர்!"

"அந்த இருபது பேரையும் கூப்பிடுங்கள். மாவு மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் கிடங்கில் ஒரு பெரிய திருடன் ஒளிந்துகொண்டிருக்கிறான்! நேற்றுத்தான் அவன் ஜெயிலிலிருந்து தப்பி வந்து விட்டான்!" என்றான் தாமு.

மானேஜருக்குக் கைகால்கள் நடுங்க ஆரம்பித்து விட்டன! உடனே தமது ஆட்களைக் கூப்பிட்டு, கிடங்கில் பதுங்கியுள்ள ஆசாமியைப் பிடிக்கச் சொன்னார்.

சொல்லி வைத்தாற்போல் மாயாண்டி மாவு மூட்டைகளினிடையே பதுங்கிக்கொண்டிருந்தான்! அவனைச் சுற்றி இருபது ஆட்கள் ஆயுதங்களுடன் நிற்கும்போது அவனால் என்ன செய்ய முடியும்?

* * *

மஞ்சுளா தாமுவின் கையைப் பிடித்துக்கொண்டு, "தாமு, உன்னுடைய மூளையை மியூஸியத்தில் தான் வைக்க வேண்டும்! அப்பாவுக்கு ரொம்பச் சந்தோஷம்! இன்ஸ்பெக்டருக்கு உன் மேல் பொறாமையாக இருக்கிறது! எப்படி மாயாண்டி இருக்குமிடத்தைக் கண்டு பிடித்தாய்?" என்று செல்லமாகக் கேட்டாள்.

"உன் அப்பாவின் அறையில் திருடனுடைய காலடிகளைப் பார்த்தேன்! காலடிகள் கொஞ்சம் வெள்ளையாக இருந்தன! எங்கள் தோட்டக்கார முனியன் வெள்ளைக் குயில் ஒன்றைப் பார்த்ததாகச் சொன்னான். வெள்ளைக் குயில் இருக்குமிடத்தில்தான் மாயாண்டியும் இருக்க வேண்டும் என்று நினைத்தேன். நான் நினைத்தது சரியாகப் போய்விட்டது!" என்றான் தாமு.

அமலன் சிறிதும் யோசிக்க அவகாசமே கொடுக்கவில்லை. ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கத்தியைச் சுழற்றிக் கொண்டே விமலனை நெருங்கினான். விமலன் பின் வாங்கிய படியே மன்றத்தைச் சுற்றிச் சுற்றி வந்தான். எவ்வளவோ தடுத்தும் தாக்குப் பிடிக்க முடியவில்லை. உயிருக்குத் துணிந்தவன்போல, விளக்கில் வந்து விழும் பூச்சியைப் போல அமலன் மிக, மிக, மிக அருகில் நெருங்கிப் போர் புரிந்தான்.

விமலன் வெகு சாதுரியமாகத் திருப்பித் திருப்பித் தாக்கும் சமயம்! அதைத்தான் துரதிருஷ்டம் என்பது! புரண்டு புரண்டு உருண்டு கொண்டிருந்த சிங்கத்தின் காலடியில் தடுக்கி அதன் மேலேயே விழுந்து விட்டான்.

அடுத்த கணம் அமலனுடைய வாள் அவன் மார்பின்மேல் ஊன்றியிருந்தது.

“ஒன்று, இரண்டு, மூன்று... பத்து!”

விமலன் எழுந்திருக்கவில்லை. அமலனுக்கே வெற்றி!

“வெற்றி, வேற்றி, வெற்றி!” என்ற ஆரவாரம் கதம்பமாக நாலாதிசையிலிருந்தும் கிளம்பியது. மக்கள் எல்லாரும் சிதறுண்டு ஓடி வந்து சகோதரர்கள் இருவரையும் சூழ்ந்துகொண்டார்கள்.

மறுநாள் இரண்டாவது போட்டி அரண்மனைச் சபா மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட பின்னர்தான் அமைதி மீண்டு வந்தது. அனைவரும் கலைந்து சென்றார்கள். சகோதரர்கள் இருவரும் தக்க பாதுகாப்போடு அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

அரண்மனையில் அமலனும் விமலனும் தனித் தனி உப்பரிகைகளில் தங்கியிருந்தார்கள். எல்லா வித வசதிகளும் அவர்களுக்குச் செய்து தரப்பட்டிருந்தன.

ஆயினும் அவர்களுக்கு இருப்பே கொள்ளவில்லை. விமலனுக்கோ ஒரு நாளில் உலகமே கசந்து விட்டது.

அதிருஷ்ட தேவதையின் அருள் முழுவதும் அமலனுடைய பங்கிலேயே இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. இல்லாவிட்டால் இந்த எதிர்பாராத தோல்வி அவனுக்கு ஏற்பட்டிருக்குமா? அடுத்த கணத்தில் மண்ணைக் கவ்வ இருந்த அமலனுக்குத் திடீரென்று எப்படி வெற்றி கிடைத்தது! சிங்கத்தின் காலில் தன்னை இடறி விழும்படி செய்து, ஒரே கொடியில் அல்லவா அமலனுக்கு வெற்றியைத் தேடித் தந்துவிட்டாள் அந்த அதிருஷ்ட தேவதை! இறைவனுடைய சித்தமும் அமலன் வெற்றி பெற வேண்டும் என்பதாகத்தான் இருக்குமோ!

இவ்விதமெல்லாம் எண்ணி எண்ணி விமலன் மனம் புழுங்கினன். அங்கே நடைபெற விருந்த மற்ற இரண்டு போட்டிகளிலும் அவனே வென்ருல் தான் உண்டு. இல்லையோ, சந்திரகிரியையும் இந்துமதியையும் பற்றி எண்ணுவதெல்லாம் பகற் கனவாகத்தான் முடிந்துவிடும். ஏதாவது ஒன்றில் வென்ருல் கூடப் போதாது. இரண்டிலும் வென்ருல்தான் முறியின் மற்ரெரு பாகம் அவன் கைக்கு வந்து சேரும்.

இதுவரையில் நடந்த ஒவ்வொரு போட்டிகளையும், தான் அவற்றில் விபரீதமான நிலையில் தோல்வியே அடைந்து வந்திருப்பதையும் கண்ட விமலனுக்கு மனம் ஒரே முட்டாக இடிந்து போயிற்று. அதிருஷ்டத்தின் சூது இது தான்! சாமர்த்தியத்திலோ, தகுதியிலோ சற்றும் அமலனுக்குச் சளையில்லாத தனக்குத் தோல்வி மேல் தோல்வியாகக் கிடைப்பது என்ருல் இது பெரும் சூது அல்லாமல் வேறு என்ன? மனித சக்திக்கும் மீறிய ஒரு சக்தி எல்லா இயக்கத்துக்கும் மூலகாரணமாக இருப்பது அவனுக்கு இப்போது தான் தெளிவாக விளங்கியது. அந்தச் சக்தியே மனிதனைத் தன் இஷ்டப்படி யெல்லாம் ஆட்டி வைக்கிறது. அது எந்த இடத்தில் நின்று, எந்த இடத்தில் ஆளைத் தூக்கித் தட்டிவிடும் என்பதை யாரால்தான் கூற முடியும்? ஆகவே தன்னம்பிக்கையோடு



கூட, தன்னை மீறிய அந்தச் சக்தியிடம் பயபக்தியும் இருக்கவேண்டியது அவசியம் என்பதை விமலன் உணர்ந்து கொண்டான்.

அதேசமயத்தில் அமலனும் சுவாரஸ்யமற்றுத் தான் காணப்பட்டான். இதுவரையில் வெற்றி பெற்றதெல்லாம் கூட அவனுக்கு ஒரு மகிழ்ச்சியைத் தரவில்லை. அதற்கு மாறாக அவனுக்கு அச்சமே அதிகரித்து வந்தது. இனியும் நடைபெறும் போட்டிகளில் எல்லாம் வெற்றிபெற வேண்டுமே என்ற கவலையே அவனைப் பிடித்துக்கொண்டது. வெற்றி ஆனந்தத்தைக் கொடுக்கிறது என்பது உண்மை; ஆனால் அது துணிச்சலைக் குறைத்து விடுகிறதே! 'இதனால் தவறிவிடுமோ, அதனால் கெட்டுப் போய் விடுமோ?' என்று இல்லாத கவலைகள் எல்லாம் வந்துவிடுகின்றன. அமலனுக்கும் அப்படித்தான் இருந்தது. இத்தனை போட்டிகளிலும் தோற்றிருந்து இனி நடைபெறவிருக்கும் போட்டிகளில் எல்லாம் வெல்வதாக இருந்தால் கூட நன்றாக இருக்குமே என்று அவனுக்குத் தோன்றியது.

இவ்விதம் பொதுவாக இருவருமே உற்சாகம் குன்றியவர்

களாகவும நடக்கப் போவதைப் பற்றியே வீண் கவலைப்படுபவர் களாகவும் இருந்தார்கள்.

மறு நாள் காலையில் சபா மண்டபம் ஜனத்திரளால் நிரம்பி வழிந்தது. அனைவரும் போட்டியின் துவக்கத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். ஊசி போட்டால் கீழே விழாது; அத்தனை நெரிசல். எல்லாரும் முதல் நாள் நடைபெற்ற போட்டியைப் பற்றியே பேசி விமரிசனம் செய்து கொண்டிருந்தார்கள். அதனால் ஒரே சத்தம். ஜனங்களுக்குத்தான் இத்தகைய பந்தயங்களில் எத்தனை உற்சாகம்!

சபா மண்டபம் வெகு அழகாகச் சிங்காரிக்கப்பட்டிருந்தது. சிம்மாசனத்துக்கு இரு புறங்களிலும் அவரவர்களுடைய அந்தஸ்துக்குரிய ஆசனங்கள் கிடந்தன. சிம்மராஜாவின் இரு புறத்திலும் இருந்த ஆசனங்கள் இளவரசர்களுக்காக இருப்பவை என்பது தெரிந்தது. பொது மக்கள் அனைவரும் நடுவில் கிடந்த மேடைக்கு வழி விட்டபடி அமர்ந்திருந்தார்கள். அந்த மேடை சிவப்புப் பட்டால் மூடப்பட்டிருந்தது. களப கஸ்தூரி வாசனையும் அகில் கட்டைகளின் புகையும் கம்மென்று மண்டபத்தில் வீசிப் பரவிக்கொண்டிருந்தன. மேடையின் இருபுறமும் இரண்டு தங்கக் கிளிக் கூண்டுகள் தொங்கின. பஞ்சவர்ணக் கிளிகள் இரண்டு அவற்றினுள் சிறகை அடித்துக் கொண்டு ஊஞ்சல் ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தது. பாலைக் குடிக்கும்; பழத்தைக் கொத்தும்; "ரங்கா, ராமா!" என்று கிள்ளை மொழி பேசும்; ஊஞ்சலில் உல்லாசமாக ஆடும்..

போட்டிப் பந்தயம் எதுவாக இருக்கும் என்று ஒருவராலும் ஊகிக்க முடியவில்லை. கண் நிறைந்த காட்சியும், மனைசைப் பரவசப்படுத்தும் நிகழ்ச்சியுமே மக்களை மகிழ்விக்கும். அத்தகைய போட்டிகளில் ஒவ்வொன்றாக அவர்கள் தமக்குள்ளேயே குறிப்பிட்டுப் பேசிக்கொண்டிருந்தார்கள். பொழுது போக வேண்டுமே! அவர்கள் தான் ஊருக்கு முன்னாலேயே வந்து கூடிவிட்டார்களே!

ராஜ பரிவாரம் வருவதைக் கட்டியங் கூறினார்கள். ராஜாதிராஜ, ராஜ குல திலக, ராஜ கம்பீர, சிம்ம வர்ம - என்று இப்படியே வெகு நீளமாக இருந்த பாளையக்காரரின் பெயரையும் இரட்டை இளவரசர்களின் பெயர்களையும் வெகு இனிமையாகக் கூறி, அவர்களது வருகையை அறிவித்தார்கள். பகலிலும் சபா மண்டபம் தீபாலங்காரங்களினால் சிங்காரிக்கப் பட்டிருந்ததால் பாளையக்காரரின் ராஜ உடைகள் தக தகவென்று ஒளி வீசின. ராஜகுமாரர்கள் இருவரும் இன்று வேறு மாதிரியான ஆடை உடுத்திருந்தார்கள். ஜூலியஸ் சீஸர் சக்கரவர்த்தி உடுத்தியிருப்பதாகக் கூறுவார்களே அதே மாதிரி, ஆனால் அதை விடக் கவர்ச்சிகரமாக இளவரசர்கள் இருவரும் ஆடை யணிந்திருந்தார்கள். மந்திரிப் பிரதானியரும் சேனைத் தலைவர்களும் தத்தமக்குரிய ஆசனங்களில் வந்து அமர்ந்தார்கள். கடைசியாக யுவராஜனை தம்பி ராஜாவும் தன் தந்தைக்கு அருகாமையிலேயே அமர்ந்தான்.

சிம்ம ராஜா எழுந்து பேசத் தொடங்கிய போது அனைவரும் கம்மென்று சத்தமிடாமல் அடங்கினார்கள். சிம்ம ராஜா போட்டியின் விவரங்களைக் கூறத்தொடங்கினார்.

"சபையோர்களே! இந்தப் போட்டி மற்றப் போட்டிகளைப் போன்றதல்ல. வெகு சாதாரணமானதுதான். ஆனால் ஈசுவர அநுக்கிரகம் இல்லாதவர்கள் இதில் வெற்றி பெற முடியாது. இதோ இந்த மேடையில் சகோதரர்கள் இருவரும் அமருவார்கள். நடுவிலே இந்தத் தந்தப் பேழையிலுள்ள சதுரங்கப் பலகை வைக்கப்படும். முதலில் இந்த இரண்டு கிளிகளும் ஆட்டத்தைத் தொடங்கி வைக்கும். அந்த ஆட்டத்தைச் சகோதரர்கள் இருவரும் தொடர்ந்து ஆடி வெற்றி பெறவேண்டும். மொத்தம் மூன்று ஆட்டங்கள் நடைபெறும். மூன்றில் இரண்டு ஆட்டங்களிலாவது வெல்பவரே ஜயித்தவராகக் கருதப்படுவார். இப்போது ஆட்டம் தொடங்கும்" என்று அறிவித்துவிட்டு உட்கார்ந்தார்.

கண கணவென்று மணி யோசை எழும்பியது. சதுரங்கப் பலகை ஒன்று நடுவே வைக்கப் பட்டது. சகோதரர்கள் இருவரும் எதிர் எதிராக அமர்ந்து கொண்டார்கள். தந்தத்தினலான கறுப்பு வெளுப்புக் காய்களை ஒரு குள்ளன் வந்து அடுக்கி வரிசையாக வைத்தான். கூண்டுகளில் இருந்த இரண்டு பஞ்சவர்ணக் கிளிகளும் வெளியே விடப்பட்டன. அவை இரண்டும் வெளிவந்து சகோதரர்களுடைய கைகளின் மேல் உட்கார்ந்து கொண்டன. இரட்டையர்கள் இருவரும் அவற்றை அன்போடு தடவிக் கொடுத்தார்கள். அமலனுடைய கிளி, "ராம,ராம" என்று கூறிவிட்டு முதலில் சேவகப் படை வரிசையிலிருந்த காய் ஒன்றை மூக்கினல் கொத்தி முன்னல் இரண்டு கட்டங்கள் தள்ளி வைத்தது. விமலனுடைய கிளி, "ரங்க, ரங்கா!" என்று கூவி விட்டுத் தன் வரிசைக் காய் ஒன்றை முன்னல் தள்ளி வைத்தது.

ஜனங்கள் அனைவரும் இந்த அதிசயப் பறவைகளையே வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆட்டத்தின் விதிகளின் படியே கிளிகள் இரண்டும் காய்களை அதனதன் மார்க்கத்தில் நகர்த்தி வைப்பதைக் கண்டு வியப்படையாதவர்கள் இல்லை. அவை இரண்டும் சிறிதும் தயங்கவில்லை; மயங்கவுமில்லை. யோசனை செய்யக்கூட நேரமின்றி அவை காய்களை நகர்த்தி வந்தன. காய்களை வெட்ட வேண்டிய சமயத்தில் வெட்டி, வெட்டிய காய்களைக் கொத்தி வெளியிலும் போட்டன. சகோதரர்கள் இருவரும் அவை ஆடுகின்ற முறையைக் கண்டு மிரண்டுகூடப் போய் விட்டார்கள். அவர்களால் யோசிக்கவே முடியாத வேகத்தில் காய்கள் இடம் மாறிக்கொண்டிருந்தன.

ஒரு சுவாரஸ்யமான கட்டத்தை ஆட்டம் நெருங்கிய சமயத்தில் குள்ளன் தன் கையிலிருந்த மணியைக் கண கணவென்று ஒலிக்க ஆட்டினன்.

(தொடரும்)

எங்கள் பகுதி

* அம்மா அபகரித்தாள்

"ராதா, கண்ணு! வாருங்கள். சுப்பு உங்களை அனுப்பினாரா? கண்ணு! நீ வெற்றி பெற்றதற்கு மிக மகிழ்ச்சி. நான் சில இடங்களுக்குப் போக வேண்டும். வரட்டுமா?" என்று கூறி விடை பெற்றுக் கொண்டேன். கேட்டீர்களா, மிஸ்டர் ஒட்டகமும் நரியும் கூடா நட்பை விளக்கினதை! திடுக்கிட்டுத் திரும்பினேன். மணி நின்றிருந்தான். அவனோடு பள்ளிக்குச் சென்றேன். தலைமை ஆசிரியர் 'தடபுடா' தர்மலிங்கத்தைப் பார்த்துவிட்டு வகுப்பிற்குள் நுழைந்தேன். நல்ல தனமாகத் திருத்தவேண்டிய வாத்தியார், அவனை இப்படி நடத்தியது வருத்தமாக இருந்தது. அந்த வகுப்பு மாணவரை என்ன செய்வதென்றே தெரியவில்லை. அடுத்தாற் போல் கஜினியும் அவரது மந்திரியும் பேசியதைக் கேட்டேன். அதை நான் வேறு ஓர் இடத்தில் கேட்டிருக்கிறேன். விஞ்ஞானம் வழக்கம்போல் நல்லதைத்தான் சொன்னார். போலீஸ்காரர் மிகவும் நல்லவர். அவரிடம் உரையாடி விட்டு ஈ. ஜி. என்—உடைய மின்சார மோட்டார் சாலையில் நுழைந்து, அவரிடம் மின்சார மோட்டார் செய்யக் கற்றுக்கொண்டேன். அவருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துத் திரும்பினேன். சோமுவும் கிட்டுவும் தாங்கள் ஒன்று நினைக்க வாத்தியார் ஒன்று நினைத்துவிட்டாரே என்று வருந்தினர். அங்கிருந்து இட்டிலிப் பாட்டியிடம் வந்தேன். பேராசை பெரு நஷ்டம் என்பதைத் தெரிந்து கொண்டாளா என்று கேட்டேன்.

வழியில் தந்திக் குமாஸ்தா ஷண்முகசுந்தரத்தைச் சந்தித்தேன். அவர் கற்பனையை அளவுக்கு மீறிச் செலவு செய்கிறார். தற்போது யாருமே தபால் கவரில் உள்ள மேல் விலாசத்தைக் கவனிப்பதில்லை. அதைப்பற்றி விரிவாக விளக்கினார். ஆ! அதோ சந்திரகிரிக் கோட்டை. எவ்வளவு வேகமாக வருகிறார்கள் அமலனும் விமலனும். சிம்மக்கோட்டையின் சிறப்பு நம்மை பிரமிப்படையச் செய்கிறது. சிம்மராஜா என்ன சொல்லப் போகிறாரோ?

---

* பரிசு பெற்ற கடிதம்

தூங்கும் அழகியைப் பார்த்துக் கொண்டே அண்ணுவும் தூங்குகின்றாரே. "அண்ணு எழுந்திருங்கள். இனி தூங்கி விட்டால் காரியம் கெட்டு விடும்" என்று அவரை எழுப்பிவிட்டு நம் மாநாடாகிய எங்கள் பகுதிக்குச் சென்றேன்.

"ஏண்டா! சாப்பிடாமல் கூட என்னடா அப்பேர்ப்பட்ட படிப்பு?" என்று சொல்லிக் கொண்டே வந்த அம்மா, கண்ணனை என் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டு உட்கார்ந்துவிட்டாள் படிக்க.

—கே. ஜயகோபால், குடியாத்தம்.

வாடா மலர்

15 - 7 - 54 கண்ணன் அட்டைப் படம் கண்ணைப் பறிக்கின்றது. தன் அண்ணன் விளையாட்டுப் போட்டியில் வெற்றிக் கிண்ணம் பெற்றுவிட்டான் என்று, தங்கையின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடுகிறது. இந்தப் படத்தை சித்திரகாரர் சுப்பு மெச்சக்கூடிய விதத்தில் முக பாவனையோடு வரைந்திருக்கிறார்.

"லீடர் மணி" மிகவும் நல்ல கதை. சித்தியின் கொடுமைக்கு ஆளாகி பிறகு வாத்தியாரின் கொடுமைக்கு ஆளாகிவிட்டான் மணி. "கேளுங்கள் சொல்லுகிறேன்" என்ற கேள்வி - பதில் பகுதியில் மற்ற எந்தப் பத்திரிகையிலும் இல்லா விஷயங்களை அறிகிறோம். "போலீஸ்காரர்" என்ற கவிதை நல்லது.

"மின்சார மோட்டார்கள்" என்ற கட்டுரை மிக மிக நன்றாக இருக்கிறது. இது போன்றவை அநேகம் வெளிவரவேண்டும், நாங்கள் செய்து பார்ப்பதற்கு.

"நாமொன்று நினைக்க" என்ற நாடகமும் நன்றாகவே அமைந்துள்ளது "தம்பி கேள்" என்ற கதை அவ்வளவு விறுவிறுப்பாக இல்லை. இட்லிப் பாட்டி வெகு ஜோர்! பேராசையினால் அழிவு வரும் என்பதை விளக்கிக் காட்டுகிறது கதை.

"சந்திரகிரிக் கோட்டை" பற்றி அதிகம் சொல்வதற்கில்லை. அதற்குத் தனியாக விமரிசனம் எழுத வேண்டும். அவ்வளவு அருமையான கதை. "தூங்கும் அழகி" பரவாயில்லை. மொத்தத்தில் கண்ணனை வாடா மலர் என்று சொல்லலாம்.

—பா. நாராயணன்,
பருத்தித்துறை, இலங்கை.

கோரிக்கை

நேர்மையான முறையில் விமரிசனம் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்விதழ்க் கண்ணனை விமர்சிக்க விரும்புகிறேன்.

பொதுவாக இவ்விதழில் ரஸமிக்க சிறுகதைகள் வெளிவரவில்லை என்பது ஒரு பெரிய குறை. குட்டிக் கதையான 'கூடா நட்பும்', 'அரசனும் அமைச்சரும்' என்ற இவ்விரு கதைகள் மட்டுமே ரஸிக்கத்தக்க முறையில் உள்ளன.

'இட்டிலிப் பாட்டி' சுவாரஸ்யமற்ற கதையாக இருப்பதுடன் வீண் வளர்த்தலாகவும் அமைந்து நம் வெறுப்பைத்தான் ஏற்படுத்திக்கொள்கிறது.

'தம்பி, கேள்!' என்னும் கடிதக் கட்டுரை மூலம் எங்களுக்கு விலா

சம் எழுதும் முறையைக் கற்றுக் கொடுக்கும் முறை எரிச்சலையே ஏற்படுத்துகிறது.

கதைகள் விஷயத்தில்தான் ஏமாற்றம் என்றாலும், நாடகமாவது நன்றாயிருந்திருக்கலாம். ஆனால், அந்தோ..! நாடகமும் இவ்வாறு நம்மை வஞ்சிக்க வேண்டும்?

'தூங்கும் அழகி'யை ஒரே ஒரு பக்கம் மட்டும் வெளியிட்டிருப்பது வருந்தத்தக்க விஷயம்.

'சந்திரகிரிக் கோட்டை' புகழ்ச் சொல் கூறும்படி நன்றாகவே இருக்கிறது. இவ்வளவு அருமையான தொடர்கதையை எழுதி, எங்கள் அன்பைச் சம்பாதித்துக் கொண்ட 'ஜனு' அவர்களை, புகைப் படத்துடனும் இயற்பெயருடனும் எங்களுக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர்களென நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம்!

'லீடர் மணி'யில் சுப்பிரமணியன் பள்ளியில் படும் அவதிகளைப் படிக்கும்போது நமக்கு இரக்கமே உண்டாகிறது. 'கேளுங்கள், சொல்கிறேன்!' பகுதியில் எல்லாக் கேள்வி-பதில்களுமே பயன் படக் கூடிய முறையில் அமைந்துள்ளன. ஹாஸ்யத் துணுக்குகளும் குறை காண முடியாதபடி நன்றாகவே உள்ளன.

கண்ணனில் வெளியாகும் கதைகளெல்லாம் செந்தமிழ் நடையிலேயே அமைந்திருக்க வேண்டுமென்பது கோரிக்கை.

—என். கே. [illegible], சேலம்.

மோட்டார் சுற்றுகிறது

திரு ஆசிரியர் அவர்களுக்கு நன்றியறிதலான வணக்கத்துடன் எழுதுவது: நாங்கள் செய்த மின்சார மோட்டார்சோதனையில் முதலில் ஒரு சிறு தவறு செய்துவிட்டோம். அதில் கார்க்கைத் தொட்டுக் கொண்டிருக்கும் கம்பிகளை மொத்தமாக வைத்திருந்தோம். தங்கள் கடிதத்திற்குப் பிறகு அதில் மெல்லிய கம்பியை இணைத்தோம். இப்பொழுது கார்க் மெதுவாகக் கூட சுழலாமல் அதிவேகமாகச் சுழல ஆரம்பித்தது. நாங்கள் யாவரும் பெரிய விஞ்ஞானப் புதுமையைக் கண்டு பிடித்தாற்போன்று அளவற்ற மகிழ்ச்சியடைந்தோம்.

—S. சிவராஜ், கும்பகோணம்.

பாராட்டக்கூடிய முறையில் எழுதியிருப்பவர்கள்:

1. ரா. கிருஷ்ணமூர்த்தி, கள்ளக்குறிச்சி. 2. நா. ராமகிருஷ்ணன், குளித்தலை. 3. கே. என். மகாலிங்கம், விஷ்ணுபுரம். 4. டி. கே. கே. கண்ணன், சென்னை-1. 5. ஆர். வசந்தா, வால்பாறை. 6. கே. வி. கே. மூர்த்தி, புதுடில்லி. 7. ஜி. ஏசுதாஸ், உரிகம். (K. G. F). 8. ஏ. என். பிரகதீச்வரன், லால்குடி. 9. எஸ். கிருஷ்ணமூர்த்தி, மேல் குமாரமங்கலம். 10. சு. லக்ஷ்மணன், மதுரை. 11. N. ஜம்புநாதீச்வரன், திருப்பூர். 12. வி. ஆர். சுந்தரம், பங்களூர்.

21791

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

சைக்கிளில் உலகம் சுற்றும் ஜெர்மன் இளைஞர்



சைக்கிளிலேயே 23,000 மைல் தூரம் பிரயாணம் செய்து இப்போது இந்தியா வந்திருக்கிறார் ஜெர்மன் இளைஞர் ரெய்னக். இவருக்கு வயது இருபதுதான் ஆகிறது. கண்ணன் காரியாலயத்துக்கு விஜயம் செய்து கண்ணனுக்காக இவர் அளித்துள்ள பேட்டியின் விவரம் அடுத்த இதழில் வெளிவரும்.

கண்ணன் கிளைக் கழகம்

கொண்டயம்பேட்டை, திருவானைக்காவல்

உபதலைவர்: மூ. இலக்குமிகாந்தன்
செயலாளர்: கே. வி. ராமமூர்த்தி
துணைச் செயலாளர்: ஏ. கௌரீசங்கர்
பொருளாளர்: கே. கே. தியாகராசன்

பத்துப் பேர் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'சிந்தனை' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. விஷயதானம் செய்ய விரும்புபவர்கள் 13, கொண்டயம்பேட்டை அக்கிரகாரம் என்ற விலாசத்திற்கு அனுப்பலாம்.

செவ்வாய்ப்பேட்டை, சேலம்

உபதலைவர்: K. K. துளசிராம்
செயலாளர்: M. B. பழனிசாமி
பொருளாளர்: N. P. நாகரத்தினம்

பத்துப் பேர் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'அம்பு' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது.

சங்கரம்பந்தல்

உபதலைவர்கள்: J. சுப்புணி ஐயர்
S. A. முத்தலீப்
செயலாளர்: M. S. அலாவுதீன்
பொருளாளர்: M. A. ஜபார்

பத்துப் பேர் கொண்ட செயற்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. நூல் நிலையம் ஒன்றும் நடத்தப்படுகிறது.

Reg. No. M. 554

புதிய கண்ணன் வெளியீடுகள்

ஏரிக்கரை மாளிகை

பாட்டி, ராஜா-ராணிக் கதைகள் சொல்வாள்; தாத்தா, மந்திரவாதி - வீரர் கதைகள் சொல்வார். எல்லாம் கேட்கக் கேட்க எங்கேயோ ஒரு தனி உலகத்துக்கு நம்மைக் கொண்டு சென்று விடும். ராஜகுமாரன் வருவான்; ராஜகுமாரி வருவாள். வீரன் வருவான்; வாள் கொண்டு சாகஸச் செயல்கள் எல்லாம் செய்வான். அற்புதத்தைச் சாதிப்பான். நாமோ ஆனந்தத்தில் மிதப்போம். அப்படிப்பட்ட புத்தகம்தான் இது. அருமையான படங்கள் நிறைந்தது.

விலை 8 அணா

விளையும் பயிர்

கி. வா. ஜகந்நாதன் எழுதியது

நம்மிடையே வாழ்ந்த, வாழுகின்ற பெரியோர்கள் உங்களைப் போலிருந்த காலத்தில் எப்படி விளையாடினார்கள்? என்ன என்ன குறும்புத்தனங்கள் செய்தார்கள்? காந்திஜி, நேருஜி, டாகுர், பாரதியார், ராஜேந்திரப் பிரஸாத், ஆஸாத், டாக்டர் சாமிநாதையர் முதலிய பெரியார்களுடைய விளையாட்டுப் பருவத்து நிகழ்ச்சிகளைக் கதைபோல ஆசிரியர் வர்ணிக்கிறார்.

விலை 8 அணா

விஞ்ஞானம் பேசுகிறார்

ஆசிரியர்கள்:

பே. நா. அப்புஸ்வாமி, ஜே. பி. மா...ங்கம்

நாம் தினசரி பல பொருள்களை உபயோகப் படுத்துகிறோம். அவை எப்படி வேலை செய்கின்றன என்பதைத் தெரிந்துகொள்வது நல்லதல்லவா? மொத்தம் 12 பொருள்களைப்பற்றி இதில் சித்திரங்களாக விவரிக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் தினம் அரைமணி செலவிட்டால் 12 நாட்களில் தெரிந்து கொண்டுவிடலாம்.

விலை 8 அணா

கண்ணன் அங்கத்தி...களுக்குக் கமிஷ...

க...ண்ணன் காரியா...

மயிலாப்பூர் :: :: சென்...